www.tamilarangam.net


# களத்தில்

கனத்த இருளுக்குள்ளும்
காற்றாய் விரைந்தோம்
அடர்ந்த மழைக்குள்ளும்
அமைதியாய் ஊர்ந்தோம்
தேசம் விடிந்திட
விழவிழ எழுவோம்!

திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடவை 23 (08.08.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் 40p


# துரோகிகளின் துரோகம்

## இதய பூமியில் விதையாகிய 180 போராளிகள்

28-07-95 அன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் முல்லைத்தீவிலுள்ள சிறீலங்கா இராணுவத்தின் ஐந்து முகாம்கள் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டன. மணலாற்றுப் பிரதேசத்தில் இருந்த 'பிரிகேட்' படையணியைக் கொண்ட பராக்கிரமபுர என்ற பாரிய தலைமையக முகாமும், மண்கிண்டிமலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், ஜெயசிங்கபுர ஆகியவற்றில் இருந்த ஏனைய முகாம்களும் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டன.

கடற்புலிப் படகுகள் மூலம் தரையிறக்கப்பட்டும், தரையினால் நகர்ந்தும் இராணுவ முகாம்களை நோக்கி ஊடுருவிய விடுதலைப் புலிகளே இத்தாக்குதல்களை நடாத்தினர். இத்தாக்குதல் காலை 10.45 மணிவரை நீடித்ததாகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் கலந்துகொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சண்டையின்போது, இராணுவத்தினருக்குப் பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. 5 முகாம்களுக்கும்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள்

ஆடி 24, 25ஆம் நாள்களில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் குழு அமர்வின் பொழுது, அண்மையில் சிறீலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையின்போது யாழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளும் குறிப்பாக, நவாலி தேவாலயத்தின் மீதும் அதனருகில் உள்ள பாடசாலை மீதும் சிறீலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய கோரக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட மரணங்கள்- பொல்கொட, அளவை ஆற்றுப் பகுதிகளில் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்ட தமிழர்களின் சடலங்கள்- கொழும்பில் தமிழ் இளைஞர்கள், மகளிர்கள் வயது வேறுபாடின்றி கைது செய்யப்படுதல், காணாமல் போதல் பற்றிய விவகாரங்கள் என்பன ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது. 18 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவின் அமர்வில், சிறீலங்கா மனித உரிமைகளைப் பேணுதல் குறித்து சமர்ப்பித்த அறிக்கையும் ஆராயப்பட்டது.

## அளவெட்டியில் தரைநகர முயன்ற இராணுவம் அடித்து விரட்டப்பட்டது

அளவெட்டியிலிருந்து மீண்டும் தரைநகர முயற்சித்த சிறீலங்கா இராணுவம், விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கியது.

சிறீலங்கா இராணுவம், காலத்துக்குக் காலம் பெரும் எடுப்புடன் தரைநகர எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல்களால் தடுக்கப்பட்டு படுதோல்வியடையச் செய்யப்படுகின்றது.

ஆயினும் இதனைமூடி மறைப்பதற்கு தனது இராணுவம், பெரும் தொகையான விடுதலைப்புலிகளை அழித்துவிட்டதாக அப்பட்டமான பொய்ப்பிரச்சாரத்தை சிறீலங்கா மேற்கொண்டு வருகிறது.

இவ்வகையிலேயே மீண்டும் அளவெட்டியில் வெள்ளிக்கிழமை (04-08-95) அன்று முன்னேற முயன்ற இராணுவத்தை எதிர் கொண்ட விடுதலைப் புலிகள்,

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## சமாதானத்தை விரும்பிய மக்களுக்கு இரங்கியமையே நாடு கடத்தப்பட நான் செய்த குற்றம்

-அமெரிக்க மறை பணியாளர் கென்னத் முல்டர்

'சமாதானத்தை ஏற்படுத்தவும் அதனை நீடிக்கச் செய்யவும் கஸ்டப்படும் மக்கள் மேல் இரக்கம் காட்டியமையே, நாடு கடத்தப்பட நான் செய்த ஒரே குற்றமாகும்'

இவ்வாறு, சிறீலங்கா அரசால் திடீரென கைதாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டவரான தேசிய கிறிஸ்தவ சபையின் மறைபணியாளரான அமெரிக்கரான கென்னத் முல்டர் கூறினார்.

இவர் நவாலி தேவாலயத்தின் மீது, சிறீலங்கா நடத்திய கொடூரமான குண்டு வீச்சினால்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் அங்கமன பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் இணைப்பதிகாரியான பிரிகேடியர் நளின் அங்கமன, 30-07-95 அன்று ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார். 29-07-95 அன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான வாழைச் சேனை முகாமைப் பார்வையிடச் சென்று கொண்டிருந்தவேளையில், பிரிகேடியர் நளின் அங்கமனவின் வாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கானது.

இத் தாக்குதல் சம்பவத்தின்போது பிரிகேடியருடன் கொல்லப்பட்ட ஏனைய நால்வரில் லெப் கேணல் ஒருவரும், கப்டன் ஒருவரும் அடங்குவர் என்றும், 14 இராணுவத்தினரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல வாகனத்தொடர்கள் சென்று கொண்டிருந்ததாகவும், அத்தொடரில் அங்கமன சென்ற வாகனம் மட்டும் மிகவும் நுட்பமான முறையில் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டதாகவும் தளச் செய்திகள்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## கொழும்பில் குண்டு வெடிப்பு

கொழும்பில் 07.08.95. அன்று காலை இரண்டு பாரிய குண்டு வெடிப்புகள் இடம் பெற்றுள்ளதாக கொழும்புச் செய்திகள்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்





சந்திரிகாவின் சமாதானப் பாய்ச்சலில் தமிழீழ மண்ணும் மக்களும்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நல்ல கலைப் படைப்புக்கள் வெளிவர நாம் வழிகாட்டியாக இருப்போம்.

-புதுவை

நாம் எல்லாவற்றிலும் உச்சத்தைத் தொட ஆசைப்படுவது போல திரைப்படத்திலும் உச்சத்தைத் தொட ஆசைப்படுகின்றோம். நல்ல கலைப் படைப்புக்கள் வெளிவர நாம் வழிகாட்டியாக இருப்போம். யாழ். சிறீதர் திரையரங்கில் அண்மையில் நடை-பெற்ற 'முகங்கள்' திரைப்பட நாடா வெளியீட்டு வைபவத்திற் கலந்துகொண்டு உரையாற்றும்போது கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில், இங்கிருந்து புலம்பெயர்ந்தவர்களால் வெளிநாடுகளிற் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. நாம் தென்னிந்தியத் திரைப்படங்களால் எமது வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகின்றது என நோக்கும் வேளையில் எமது மண்ணில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள், தயாரிக்கும் திரைப்படங்களாலும் இந்தக் குந்தகம் ஏற்படுகின்றது. இது சினிமாவில் மட்டுமல்ல, இசை, இலக்கியம் எல்லாவற்றிலும் உள்ளது.

நாம் அடுத்த கட்ட வளர்ச்சியில் இருக்கின்றோம் என்பதை 'முகங்கள்' படம் காட்டுகின்றது. நான்கு வீடியோப் படங்கள் வெளியிடக்கூடிய நிலையில் உள்ளன. விரைவில் இந்த வீடியோப் படங்களை ஆய்வு செய்ய வேண்டிய தேவைகூட எமக்கு உள்ளது என்றார்.

நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் தலைமை வகித்து உரையாற்றுகையில், தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்த வீடியோப்படங்கள் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தி வருகின்றமையை நாம் கவனத்திற் கொள்ளலாம்.

எமது தேசியத் தலைவர் ஊக்கப்படுத்தி, வளர்த்த, இத்தேசத்தின் வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்குப் பொக்கிசமாக்கும் நிலையைப் பார்க்கலாம். கலைஞர்களின் ஒத்துழைப்பால் இந்தப்படத்தைத் திறமையாக உருவாக்க முடிந்ததென்றார்.

# இஸ்ரேலுடன் உறவு வேண்டாம்

## அரசுக்கு பி. எல். ஓ. எச்சரிக்கை

இலங்கைக்குள் இஸ்ரேலர்களைக் கொண்டு வரும் சிறிலங்கா அரசின் எந்த ஒரு முயற்சியும் சிறீலங்காவுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவை மோசமாகப் பாதிக்கும் என்று சிறிலங்காவுக்கான பாலஸ்தீன விடுதலை இயக்க (பி. எல்ஓ) பிர-திநிதி அதெல்லாகுப்பியா எச்சரித்துள்ளார். இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டால் தாமும் மற்றும் அரபு நாடுகளின் தூதுவர்களும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்

பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதியான அதெல்லாகுப்பியா நாடாளுமன்றக் குழுக்களனின் பிரதித்தலைவரும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளருமான ஆர். ஹக்கீமை நாடாளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தபோது மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

இஸ்ரேலுடன் முழு அளவிலான ராஜதந்திர உறவை ஏற்படுத்துவது குறித்து சிறீலங்கா அரசு ஆராயும் என்று வெளிவிகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் சமீபத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு வலய உடன்பாட்டிற்கு உரிய மதிப்பளிக்குமாறு செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

யாழ் போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பாதுகாப்பு வலயத்திற்கு உரிய மதிப்பளிக்குமாறும் அத்துடன் ஏனைய வைத்திய நிலையங்கள் மீதான தாக்குதல்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனிவா தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஆடி ஒன்பதாம் திகதி சிறீலங்கா ஆயுதப்படைகள் ஆரம்பித்த பெரியளவிலான இராணுவ நடவடிக்கையில் ஆட்லறி எறிகணை வீச்சுக்களும் ஆகாயத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் தேவாலயங்களிலும், கோயில்களிலும் தங்கியுள்ளனர். நவாலி சென் பீற்றர் தேவாலயத்திலும் நூற்றுக்கணக்கில் இடம் பெயர்ந்தோர் தங்கியிருந்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இத்தேவாலயத்தையும், அதற்கருகே இருந்த கட்டடங்களையும் விமானப்படை தாக்கியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். இத்தாக்குதலில் பெண்கள் சிறுவர்கள் உட்பட 65 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 150பேர் வரை படுகாயமடைந்தும் உள்ளனர். அன்று மாலை தொட்டு இரவு வரை இலங்கை செஞ்சிலுவை சங்க ஊழியர்கள் அம்புலன்சுகளில் படுகாயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அடுத்தநாட்காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிர-திநிதிகள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் விஜயம் செய்தனர். அங்கு நிகழ்ந்துள்ள அனர்த்தங்களையும், ஏற்பட்ட பாதிப்புக்களையும் நேரில் அறிந்து கொண்டனர். இடிபாடுகளில் சிக்கியிருந்த பல சடலங்கள் இன்னமும் மீட்கப்பட வில்லை.

அப்பாவிப் பொதுமக்களை பாதிப்புக்குள்ளாக்கியுள்ள இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மோதலில் சம்பந்தப்பட்டுள்ள சக்திகள் அப்பாவிப் பொதுமக்களின் உயிருக்கு மதிப்பளிக்க வேண்டுமெனவும், நம்பிக்கையுடன் அடைக்கலம் தேடும் இடங்கள் தாக்கப்படக்கூடாது எனவும் வேண்டுகின்றோம். அத்துடன் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சூழலில் பிர-கடனம் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வலய பிரகடனத்தை கௌரவிக்க வேண்டும். மருத்துவ வசதிகள் தங்குதடையின்றி கிடைக்க வகைசெய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சொல்லொணாத் துயர்கள் மத்தியில் தமிழ்நாட்டில் ஈழத் தமிழ் அகதிகள்

ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிற் சொல்லொணாத் துயரங்களுக்குட்பட்டு வருவதாகக் கூறப்படும் புகார்கள் குறித்துத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடாத்தவுள்ளது. தமிழ் அகதிகளுக்கு விசா வழங்க மறுப்பு, உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி வழங்காமை, நாடு திரும்புமாறு பலவந்தமாக அகதிகளைக் கேட்டுக் கொண்டமை போன்ற புகார்கள் தொடர்பாக இந்த விசாரணை நடாத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாடு திரும்புவோருக்கான அகில இந்திய ஐக்கிய முன்னணித் தலைவர் எம். இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் தமது அலுவலகத்தின் ஊடாகத் தமது மனுக்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

# பிரிட்டிஷ் பிரசைகள் இலங்கைக்கு உல்லாசப் பயணம் வேண்டாம்

## — பிரிட்டிஷ் அரசு ஆலோசனை

தமது நாட்டவர்கள் எவரும் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாகச் செல்வது உசிதமில்லை என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது. இலங்கையில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையைக் கொண்டே இத்தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை பிரிட்டனிலிருந்து வரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் வெகுவாகக் குறைந்திருப்பதாக சிறீலங்காவின் உல்லாசப் பயணச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை வரவேண்டாம் என அண்மையில் எல்லாளன் படை எனும் அமைப்பு கோரியிருந்தமை தெரிந்ததே.

# முஸ்லிம் பகுதியிலிருந்து தமிழரது எலும்புக்கூடு மீட்பு

வாழைச் சேனை பகுதியில் கறுவாக்கேணிக்கும் மீராவோடைக்கும் இடையே கடந்த புதனன்று தமிழருடையதென நம்பப்படும் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பகுதியில் பாழ்வளவு ஒன்றிலுள்ள மலசல கூட குழியினுள்ளே இந்த எலும்புக்கூடு தலை கீழான நிலையில் கிடக்கக் காணப்பட்டது மரணமானவர் இடுப்பில் அரை நாண் கயிறு அணிந்திருந்தார் இம் மரணம் பலமாதங்களுக்கு முன்னனர் சம்பவித்திருக்க வேண்டும் என பிரேதபரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணமானதாகக் கருதிய சிறுமியர் வைத்தியசாலையில் கண்டுபிடிப்பு

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின்மீது கடந்த ஒன்பதாம் திகதி புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பலியாகியதாகக் கருதப்பட்ட இரு சிறுமியர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சங்கானையைச்சேர்ந்த சிவகுமார் சரேக்கா (வயது12) என்னும் சிறமியும் நடேசு ரமணா (வயது 11) என்னும் சிறுமியுமே இவ்வாறு பெற்றோரால் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்கள் பெயர் விபரம் தெரியாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் 24ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்தனர். இவர்களுள் சிவகுமார் சரேக்கா என்னும் சிறுமி சங்கானையிலிருந்து இடம் பெயர்ந்து அவரது சிறிய தகப்பன் சிறயதாய் அவர்களின் இருபிள்ளைகள் ஆகியோருடன் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்ததாகவும் நவாலி தேவாலயப் பகுதிக்கு வந்து கொண்டிருந்த போது இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குண்டு வீச்சில் இவரது சிறிய தகப்பன், சிறிய தாய் இருகுழந்தைகளும் கொல்லப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவர்களுக்குப் பின்னால் சைக்கிளில் வந்த இச் சிறுமியின் பெற்றோர் குண்டு வீச்சுக்கு முன்பாக அவ்விடத்தை மோட்டார் சைக்கிளில் கடந்திருப்பார்கள் என நினைத்துச் சென்று விட்டனர். ஆனால் இச் சிறுமியும் கூடச் சென்றவர்களும் உரிய இடத்துக்குச் செல்லாததை அடுத்து அவர்களைத் தேடிய போது, சிறுமியுடன் சென்ற அனைவரும் சடலமாக இருப்பதைக் கண்டு பிடித்தனர். இதனால் மேற்படி சிறுமியும் கொல்லப்பட்டதாக எண்ணி மரணச்சடங்கையும் மேற்கொண்டு விட்டதாகத் தெரிய வருகிறது..

# இடம்பெயரும் மக்களுக்கு பொது நிறுவனங்கள் உதவி

இராணுவநடவடிக்கைக்கு அஞ்சி பாதுகாப்புத் தேடி இடம்பெயரும் ஆயிரக்கணக்கான மக்களும் சனசமூக நிலையங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தோர் தாக சாந்தி வழங்கியும் சிற்றுண்டிகள் வழங்கியும் சமூக அக்கறையுடனான நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது விமானக்குண்டுவீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலினால் அஞ்சி உயிரைக்காத்துக் கொள்வதற்காக குடும்பம் குடும்பமாக குழந்தை கள் ஆண்கள் பெண்கள் வயோதிபர் எனப்பல்லாயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த போது இந்த மக்கள் . பசியினாலும் தண்ணீர் தாகத்தினாலும் சோர்ந்து நகர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த மக்களுக்கு இந்த சமூக அமைப்புக்களின் பணி பெரிதாகக் கருதப்படுகிறது.

## அனைவரையும் யுத்தத்திற்காக

# ஒன்றிணைப்பதே எமது நோக்கம்

யுத்தத்திற்காக அனைவரையும் ஒன்றிணைப்பதே வெண்தாமரை இயக்கத்தின் நோக்கமாகும் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். பிபிசியின் சிங்கள சேவையான சந்தேசியாவிற்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஒவ்வொரு கிராமம் கிராமமாக யுத்தம் செய்வதன் நோக்கத்தை மக்களிடம் தெளிவுபடுத்த இருக்கிறோம் வெண்தாமரை இயக்கத்தின் மூலம் தேசியபாதுகாப்பு நிதிக்கு பணம் திரட்டுவது முக்கிய நோக்கம் அல்ல யுத்தம் தொடர்பாக மக்களிடம் நம்பிக்கையை கட்டியெழுப்ப இருக்கிறோம். யுத்தத்தை நாம் தொடர்ந்தும் நீடித்துச் செல்லமாட்டோம். விரைவிலேயேஎமது இலக்கை அடைந்து விடுவோம் என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நெஞ்சம் பதைக்கிறது

தாய்நாட்டின் விடுதலைக்காய் களம் புகுந்த 180 விடுதலைப்புலிவீரர்கள், காட்டிக்கொடுக்கும் கயமைத்தனத்திற்கு இலக்காகி, தம் இன்னுயிர்களை இழந்து மாவீரரான வரலாற்றுச் சம்பவம் கண்டு உலகத் தமிழர்கள் நெஞ்சம் பதைபதைக்கின்றனர்.

அதேவேளை, எம்இனத்தின் கோடரிக்காம்புகளால் ஏற்பட்ட இத்துயரநிலையினைத் தனது இராணுவத்தின் வெற்றிப்பிர-கடனமாக, சிறீலங்கா அரசு சர்வதேச உலகிற்குக் காட்ட முற்படுகின்றது. எதிர் பாராத வகையில் ஏற்பட்ட புலிகளின் இழப்புக்களை வைத்து, தாம் ஏதோ விடுதலைப் புலிகளை அழித்தொழித்து தமது ஆக்கிரமிப்பில் வெற்றி பெற்றிட முடியும் என்பதுபோல் சிறீலங்கா கொக்கரிக்கிறது. இத்தனைக்கும் காரணம், இனத்தைக் கெடுக்கும் தமிழினத் துரோகிகள் தான் என நினைக்கையில் ஒவ்வொரு தமிழனது நெஞ்சம் துடிதுடிக்கிறது.

ஆனால், விடுதலைப் புலிகள் இழப்புக்களைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்ல. ஒவ்வொரு இழப்புக்களையும் தமது மனோவலிமையால் வெற்றியின் படிகளாக மாற்றியவர்கள் விடுதலைப்புலிகள் என்பதை வரலாறு நிரூபித்து நிற்கிறது. இன்றும், உயிர்நீத்த 180 புலிவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தி, அவர்கள் பாதையில் பல நூற்றெண்பது புலிகள் சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசுக்கு எதிராகப் போராட அணிவகுத்து நிற்கின்றனர். இதனைச் சிறீலங்கா அரசு நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் மாறாக, மற்றொரு பெரும் தாக்குதலைத் தொடுத்து, தமிழர்களை முழுமையாக இனஅழிப்புச் செய்வதற்கான தீவிர இராணுவ ஆயத்தங்களிலேயே சிறீலங்கா குதித்துள்ளது. எந்நேரத்திலும் சிறீலங்காவின் மற்றோர் ஆக்கிரமிப்புப் போர் முடுக்கிவிடப்படலாம் என்கிற ஊகமே பரவலாக உள்ளது.

ஆயினும் சிறீலங்காவின் எத்தகைய ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு முறியடித்து, தமிழீழ மக்களுக்கான தேசிய பாதுகாப்பினை வழங்கக்கூடிய இராணுவ வலிமையையும் மன உறுதியையும் விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் கொண்டுள்ளனர் என்பது, உலகுக்குப் பலமுறை நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளது.

இதனால்தான் சர்வதேச உலகம், வீணான போரை நிறுத்தி இராணுவ வழியில் தீர்வுகாண முடியாத பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணும்படி சிறீலங்காவை வற்புறுத்துகின்றது.

இதனைச் சமாளித்து, சர்வதேச உலகின் கண்களில் மண்தூவும் முயற்சிகளில் ஒன்றாகவே அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை, சந்திரிகா தன்னிச்சையாக அறிமுகம் செய்துள்ளார். மறுபுறமாக, தமிழின அழிப்பில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார்.

எது எப்படியிருப்பினும், கருவான தமிழீழம் உருவாவதைத் தடுக்கும் சக்தி, இனி யாருக்கும் இல்லை என்பதைத் தமிழீழ விடுதலை வரலாற்றைத் தெரிந்தவர்கள் நன்கு அறிவர். ஆகவே இந்த யதார்த்தத்தை ஏற்கும்வரை இலங்கைத் தீவில் அமைதி திரும்பாது. அத்தோடு சிங்கள சிறீலங்கா இதை ஏற்கப் போவதும் இல்லை. இதற்கான ஒரே வழி. ஈழத்தமிழர்கள் விடுதலைப் போரில் வெற்றி பெறுவது ஒன்றுதான். இதற்கான வலிமை விடுதலைப் புலிகளுக்கு உண்டு. வலிமைக்கு துணைசேர்க்க வேண்டிய கடமை உலகத்தமிழர்கள் அனைவருக்கும் உண்டு.

# கடற்படை வெறியாட்டத்தில் இரண்டு மீனவர் படுகாயம்

வடமராட்சி வடக்குக் கடலில் சிறீலங்காக் கடற்படையினர் நடாத்திய வெறியாட்டத்திற்கு இலக்காகி, இரண்டு மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். மேலும், மூன்று மீனவர்களைக் காண வில்லை. மீனவர்களது படகுகள், என்ஜின்கள் பலவும் சேதமடைந்தன. இக்கடலில் இரண்டு வெவ்வேறுபட்ட நேரங்களில் நடந்த படையினரின் வெற-ியாட்டத்தின் போது இது நிகழ்ந்துள்ளது. 20.07.95 காலை 7.00 மணியளவிலும், 19.07.95 இரவு 8.30 மணியளவிலும் இச்சம்பவங்கள் நிகழ்ந்தன.

பருத்தித்துறைக் கடற்பகுதியில் 20.07.95 காலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது, சுப்பர் மடத்தைச்சேர்ந்த துரைச்சாமி நாகராசா (50) கைகளிலும், நெஞ்சு, காது என்பனவற்றிலும் படுகாயடைந்தார்.

வல்வெட்டித்துறைக் கடலில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது, தொழில் செய்து கொண்டிருந்த வல்வெட்டித் துறை கொத்தியால் என்ற இடத்தைச் சேர்ந்த பாஸ்கரதாஸ் (31) என்பவர் கடலில் குதித்த போது, படகுடன் மோதி தலையில் காயமடைந்தார்.

மற்றும் 19.07.95 இரவு மணல்காடு குடத்தனை கடற்பரப்பில் தொழில் செய்து கொண்டிருந்த மூன்று மீனவர்களைக் காணவில்லை. பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த சபாரட்ணம் செல்வரட்ணம் (34) ஆறு பிள்ளைகளின் தந்தை, முத்தையா பார்த்தீபன் (30)- நான்கு பிள்ளைகளின் தந்தை, பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன் (24)- மூன்று பிள்ளைகளின் தந்தை ஆகியோரையே காண வில்லை,

## புலிகளின் தாக்குதலுக்கு கிழக்கில் 10 படையினர் பலி!

மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 20.07.95 இல் விடுதலைப்புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர்.

நான்கு பேர் படுகாயம் அடைந்தனர். 20.07.95 அன்று நள்ளிரவு அம்பாறை மாவட்டத்திலுள்ள திரிகோடை விசேட அதிரடிப் படை முகாம் மீது, புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். வேறொருவர் காயம் அடைந்தார்.

சித்தாண்டியில் புகையிரதப்பாதையில் ரோந்து சென்ற படையி-னர் மீது, அதே நாள் காலை ஏழு மணியளவில் புலிகள் தாக்குதல் நடத்தியதில் எட்டுப் படையினர் அந்த இடத்திலேயே பலியாகினர். மேலும், அதிகாரி உட்பட மூன்று படையினர் படுகாயம் அடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனச் சிறீலங்காப் பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

# 'றோ'வுடன் இணைந்து ஈ.பி.டி.பி. இலங்கையில் செயற்படுகிறது!

**நெடுமாறன் குற்றச்சாட்டு**

இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஈபிடிபி. எனப்படும் குழுவுக்கும், இந்திய அரசின் உளவுப் பிரிவான றோ அமைப்புக்கும் தொடர்பு ஏற்பட்டிருப்பதாகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் கூறியுள்ளார்.

சென்னையிலிருந்து பி. பி. சி. முகவர் பகவான்சிங் அனுப்பிய செய்திக் குறிப்பை மேற்கோள் காட்டி பி. பி. சி. மேலும் தெரிவிக்கையில், தமிழ் நாட்டில் ஈ. பி. டி. பி. படைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது எனவும், இலங்கையில் தமிழர் போராட்டத்தை நசுக்க இந்திய அரசு கொழும்புடன் இணைந்து சதி செய்கிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய தந்திரோபாயத்தை இராணுவம் கையாளுகின்றது.

**- பி. பி. சிக்கு ராவய இக்பால்**

வடபகுதி போர் முனையில் இராணுவத்தினர் புதிய தந்திரோபாயமொன்றைக் கடைப்பிடிப்பது போலத் தெரிகிறது. இவ்வாறு ராவய இக்பால் கொழும்பிலிருந்து பி. பி. சிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இராணுவத்தில் நிலவும் ஆட்பற்றாக்குறை காரணமாக ஆறு நாள் போரில் கைப்பற்றிய வடபகுதி நிலைகளிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்குவதாகவும், ஏற்கனவே தம்வசம் இருந்த பகுதிகளைப் பலப்படுத்துவதில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளரை மேற்கோள் காட்டித் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றி பாதுகாப்பு அரண்களை நிறுவி பாதுகாக்கும் வழமையான தந்திரோபாயத்தைக் கைவிட்டுப் புதிய தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்படுவதாகவும், இதன் காரணமாக அரசியல் லாபங்கள் எட்டப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

# யுத்தம் முடிவடையும் வரை அழுத்தம் தருவதில்லை

**ஐக்கிய தேசியக் கட்சி முடிவு**

அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக, அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதை ஐ. தே. க தற்சமயம் ஒத்தி வைத்துள்ளது. தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் முடிவடையும் வரை, ஐ. தே. க தனது நடவடிக்கைகளை ஒத்தி வைத்திருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆடி 15 க்குப் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு உட்பட, பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றக் கோரி ஐ. தே. க. நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தமை தெரிந்ததே. இது பற்றி ஐ. தே. க, பா. உ ரான கருணசேன கொடிதுவக்கு கூறுகையில் கூட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளிலோ அல்லது இராணுவ நடவடிக்கைகளுக்குக் குந்தகம் எற்படும் வகையிலோ ஐ. தே. க செயற்படாது எனத் தெரிவித்தார்.

# தின்னையடியில் கொடூரம்

## தப்பியோடிய இராணுவம் 3 பொதுமக்களைக் கொன்றது

மட்டக்களப்பு தின்னையடியில் ரோந்து சென்ற சிறீலங்கா இராணுவத்தினர், இரவு வேளை பொதுமக்கள் மீது நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் பத்துப்பேர் படுகாயமடைந்தனர். 17.07.95 செவ்வாயன்று இரவு 7.00 மணியளவில் தின்னையடியில் ரோந்து சென்ற சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது தப்பியோடிய படையினர், அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மோட்டார் தாக்குதலையும் மேற்கொண்டனர். இதன்போதே மூன்று பொதுமக்கள் பலியாகி-னர். மேலும், பத்துப்பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் புலிகள் வலுவை வெளிப்படுத்தக்கூடியவாறு நன்கு அமைக்கப்பட்டு அதிகாரத்துடன் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணும் அரசியல் நிர்வாகத்தை ஏற்கனவே வடக்கு-கிழக்கில் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மூலம் மட்டுமே எந்த அதிகாரப் பாரவலாக்கலும் நடைமுறைச் சாத்தியமாகலாம். எனவே அதிகாரப் பரவலாக்கத்தின் சட்டவடிவாக்கம் மட்டுமல்ல நடைமுறையாக்கலிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதாகவுள்ளது.

திருப்பிச் சிறிலங்காவில் நடைபெறுவதை அண்மைக்காலச் சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன. நான் உறுதியாக நம்புகிறேன், பழமையான கருத்துக்களிலிருந்து நீங்கித் துணிவுடன் புதிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலே வெற்றி ஏற்படும்.

சிறிலங்கா எட்டு மாகாணமாக சுயாட்சியை வழங்குவதற்கு ஏற்ற அளவு பெரிய பிரதேசத்தைக் கொண்டிருக்கவில்லை. வடக்கு-கிழக்கைத் தவிர மற்றைய ஏழு மாகாணங்களும் சுயாட்சியைப் பெறும் அளவுக்குப் பெரிய பிரதேசங்களைக் கொண்டு விளங்கவில்லை. ஆறு ஆண்டுகால ஏற்று அமுலாக்கிச் சுயாட்சிக்கான உண்மையான பெறுதியை உருவாக்கவல்ல அரசியற் கட்டமைப்பை தெரிவுசெய்வது அதைவிடச் சிக்கலான ஒன்றாக உள்ளது. அரசியல் ரீதியில் ஏற்புடைய முறையில் இதனைச் செய்வதற்கான ஆலோசனை என்னவென்றால், வடக்கு-கிழக்கில் அரசியல் நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதுவே அரசின் அதிகாரப் பரவலாக்க முயற்சிகளை நடைமுறைப் படுத்துவதற்கான மிகச் சிறந்த பொறியாக உள்ளது என்பதேயாகும். கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தமிழீழ விடுதலைப்

# எந்த அரசியல் தீர்வினதும் சட்டபூர்வ ஏற்பாளர்கள் விடுதலைப் புலிகளே

## - சிறீலங்கா அமைச்சர் தொண்டமான்.

வடக்கு-கிழக்கு பிராந்தியசபையானது பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடையும்பொழுது இருந்தது போலவே எவ்வித மாற்றமும் இன்றி இருத்தல் வேண்டும். அதிகாரப் பரவலாக்கற் திட்டமானது இன்றைய வடக்கு-கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் எல்லைமீறல் நிறுத்தப்பட்டு எல்லைகள் இருக்கின்றவாறே பேணப்பட வேண்டும். ஆனால் எல்லைகளை மீள்வரைவு செய்தல் சிங்கள, தமிழ், முசலிம்களின் நலனுக்காக எனச் சிறீலங்கா அரசு கருதி, எல்லைமீள் வரைவில் இறங்குமானால் இந்தியத் தமிழரின்

மாகாணசபை அனுபவங்கள், அதிகாரப் பரவலாக்கத்திற்கான பரிசோதனைகள் தோல்வி அடைந்துள்ளமையைக் காட்டுகின்றன. எனவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நான்கு அலகுகளை உள்ளடக்கிய அதிகாரப் பரவலாக்கல் ஒன்றைச் சிறீலங்கா அரசுக்குத்

புலிகளே சுதந்திரத்திற்கான போராட்டத்தினைத் தீர்மானித்துத் தலைமை தாங்கி வலுவை வெளிப்படுத்தக் கூடியவாறு நன்கு அமைக்கப்பட்டு அதிகாரத்துடன், சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுகின்றனர். எனவே அதிகாரப் பரவலாக்கத்தின் இலக்கான பிராந்திய அரசானது விடுதலைப் புலிகளாலேயே அமைக்கப்பட வேண்டும். அரசியல் ஒழுங்கமைப்பினூடாக வெற்றியைத் தேடும்

விடுதலைப் புலிகள் வலுவை வெளிப்படுத்தக்கூடியவாறு நன்கு அமைக்கப்பட்டு அதிகாரத்துடன் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணும் அரசியல் நிர்வாகத்தை ஏற்கனவே வடக்கு-கிழக்கில் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மூலம் மட்டுமே எந்த அதிகாரப் பாரவலாக்கலும் நடைமுறைச் சாத்தியமாகலாம். எனவே அதிகாரப் பரவலாக்கத்தின் சட்டவடிவாக்கம் மட்டுமல்ல நடைமுறையாக்கலிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதாகவுள்ளது.

நலனைக்கருதி அவர்களுக்கு ஏற்ற அரசியல் நிர்வாக அமைப்பைக் கொண்ட எல்லை மீள்வரைவு அவர்கள் வாழும் பிராந்திய சபைகளிலும் இடம்பெற வேண்டும் என்பது எமது நியாயமான கோரிக்கையாகும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சிறீலங்காவின் அமைச்சருமான சௌமியமூர்த்தி தொண்டமான் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக்கடிதம் ஒன்றில் வலியுறுத்தியுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது-

கடந்த ஆறு தசாப்தங்களாகத் தமிழர் பிரச்சினை என்பது இலங்கையிலுள்ள எல்லாச் சமூகத்தவரினதும் ஆழ்ந்த கவனத்திற்குரிய விடயமாக உள்ளது. வடக்கு-கிழக்கில் சனத்தொகை ரீதியாக மேலாண்மையைக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் சுயாட்சியை ஐம்பதுகளின் தொடக்கத்திலேயே கேட்டனர். மிகத் தெளிவாக அடையாளங் காணக்கூடியதும் தொடர்ந்து வருவதுமான எல்லைகளில் வாழ்ந்துவரும் அவர்களது உரிமைகளை, இந்த அரசுகள் விசேடத் தீர்வுத் திட்டங்களை வரைந்து, அவர்களது எதிர்கால ஆவல்களையும், அபிலாசைகளையும் திருப்தி செய்ய முயன்றன. 1995ஆம் ஆண்டின் இந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் இழையோடி நிற்கும் சிந்தனைகள் 1957ஆம் ஆண்டின் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்தவையே.

ஆயினும் வடக்கு-கிழக்கு பிரதேசத்திற்கான தீர்வு, விசேட பிரச்சினைக்கான விசேட தீர்வு என்ற உண்மையின் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள மனவிருப்பு இன்மையினால் மற்றைய பிரதேசங்களுக்கான தீர்வும் இதுவும் ஒன்று என்ற பாணியில் தொடர்ந்து வந்த அரசுகள் தீர்வுகளை விரிவுபடுத்த முயன்றன. சுயாட்சியானது எல்லாப் பிரதேசங்களுக்கும் உரியது என்ற அடிப்படையில் நோக்கினால் மத்திய அரசின் வலு குறைவடையத்தான் செய்யும் என்ற அச்சம் கலந்த விமர்சனம் உண்டு. இதன் காரணமாக அதிகாரப் பகிர்வின் உள்ளடக்கம் மிக ஐதானதாக்கப் பட்டுவிடுகிறது. இவ்வாறு பைத்தியகாரத்தனமாக ஐதாக்கப்பட்டு மிகுதியானவற்றைக் கொண்ட அதிகாரப் பரவலாக்கத்தை வடக்கு-கிழக்கு மக்களுக்குக் கொடுக்கின்றனர். இது எல்லாவற்றையும் தலைகீழாகக் குழப்பி இத்தகைய தீர்வைக் கவனத்திற்கெடுப்பதை விட நிராகரிப்பதே நல்லது என்ற நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இதன் பின்னர் இதற்கான பதில் விளைவு உற்சாகமற்றதாகவோ அன்றில் எதிர்ப்புத் தன்மையானதாகவோ மாறிவிடுகிறது. அரசியற் தீர்வானது நிராகரிக்கப்படும் பொழுது நாட்டினத்தினது வெளிப்பாடானது வேறு வகையான அரசியலுக்கு விஸ்தீரணம் அடைகிறது அதாவது போர் அல்லது சண்டை மூள்கிறது. கடந்த நான்கு தசாப்தங்களாக இத்தகைய இயல்புகள் திருப்பித்

தெரிவிக்க விரும்புகின்றது. அவையாவன-

அ-வடக்கு-கிழக்கு

ஆ-வடமத்தியும் வடமேற்கும்

இ-மத்திய, ஊவா, சப்பிரகமுவ

ஈ-மேல், தென் மாகாணங்கள்

இந்த நான்கு பிரதேசங்களுக்கும் முழு அளவிலான சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பிராந்திய சபையின் எல்லை, சுதந்திரத்திற்குப் பின் இருந்த அதேநிலையில் எவ்வித மாற்றமும் இன்றித் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

அதிகாரப் பரவலாக்கற் திட்டமானது வடக்கு-கிழக்கு பிரதேசம் மீள்வரைவு செய்யப்பட்டு இன்றைய அதன் எல்லைகள் மாற்றப்படும் எனக்கூறுகிறது. இந்த யோசனை சிங்கள், தமிழ், முசலிம் இனங்களின் நலன்களைக் கருத்திற் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பின்னர் தயாராக்கும் உண்மையான யோசனைகளில் எல்லைகள் மாற்றப்படாமல் அப்படியே விடப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது. அப்படி இல்லாமல் எல்லைகள், சிங்கள, தமிழ், முசலிம் மக்களின்



தமிழர்களுக்குச் சுயாட்சிக்கான போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பங்கினை ஏற்றுக்கொள்ளும் கடமைப்பாடு உள்ளது. சிறிலங்கா அரசும் எந்த அதிகாரப் பரவலாக்கத்தினதும் சட்டபூர்வமான ஏற்பாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் என்பதை ஏற்றேயாக வேண்டும். எனவே விடுதலைப் புலிகளிடம் ஐந்து ஆண்டுகால இடைக்கால பிராந்திய ஆட்சியினை சிறீலங்கா ஒப்படைக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இந்த ஐந்து

தமிழர்களுக்குச் சுயாட்சிக்கான போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பங்கினை ஏற்றுக்கொள்ளும் கடமைப்பாடு உள்ளது. சிறீலங்கா அரசும் எந்த அதிகாரப் பரவலாக்கத்தினதும் சட்டபூர்வமான ஏற்பாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதை ஏற்றேயாக வேண்டும். எனவே விடுதலைப் புலிகளிடம் ஐந்து ஆண்டுகால இடைக்கால பிராந்திய ஆட்சியினை சிறீலங்கா ஒப்படைக்க வேண்டும்.

நலன்களின் பேரில் மீள்வரைவு செய்யப்பட்டு மாற்றப்பட வேண்டுமென்பது கட்டாயப் படுத்தப் படுமானால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இந்திய வம்சாவளித் தமிழரின் நலனை அடிப்படையாகக் கொண்டு இதேமாதிரி நிர்வாக அமைப்புக்களை உள்ளடக்கிய பகுதி பெருந்தோட்டப் பகுதிகளில் நிறுவப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

போரில் ஈடுபட்டுள்ள சிறீலங்கா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே, எத்தகைய அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தினதும் பேரம் பேசும் பங்காளர். இந்த யோசனைகளுக்குச் சட்டவடிவு கொடுப்பது சிக்கலான-தொன்று. அத்துடன் இந்த அதிகாரப் பரவலாக்கலை ஆண்டு காலத்துள் வலுவைப் பங்கீடு செய்யவல்ல அதிகாரத்தைப் பங்கீடு செய்ய ஏற்ற சனநாயக அமைப்புக்களை அபிவிருத்தி செய்யவேண்டும். மத்திய அரசிற்கு விடுதலைப் புலிகள் சனநாயகப் பாதையினை உறுதியான முறையில் கட்டி எழுப்புவதற்கான வசதிகளை அளிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

துணிவும், உறுதியான அரசியற் தலைமையும், ஐதாக்கம் செய்யப்படாத சுயாட்சியை வழங்க வேண்டிய தேவையும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எனக்குண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படையெடுப்பு அபாயம் நீங்கவில்லை

## மண்ணும் மக்களும்





யாழ் குடாநாடு இன்னும் ஒரு இராணுவப் படையெடுப்பை எதிர்கொண்டபடியே உள்ளது. பலாலிப் பெருந்தளத்தில் இதற்கென குவிக்கப்பட்ட துருப்புக்களும், ஆயுத தளபாடங்களும் உள்ளன. அத்தோடு, குடாநாட்டின் மீதான படை நடவடிக்கைகளை இன்னும் கைவிட வில்லை என சந்திரிகா அரச கூறுகின்றது. இந்நிலையில் போருக்கு முகம் கொடுத்து எதிரியை விரட்டியடிக்க இளைஞர்களும், யுவதிகளும் புலிகள் இயக்கத்தில் இணைய உடனடியாக முன்வர வேண்டும்.

இவ்வாறு, அரசியற்றுறையினர் விடுத்த அறிக்கை ஒன்றில் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ் அறிக்கையின் முழு விபரமும் வருமாறு-

### தலைவர் திட்டமிட்டு நடத்திய புலிப்பாய்ச்சல்

பேரழிவுகளை எமது மக்களுக்கு உண்டுபண்ணிய முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கைக்குப் பதிலடியாக, தலைவர் பிரபாகரன் அவர்களால் திட்டமிட்டு நெறிப்படுத்தப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கை, குடாநாடு மீதான படையெடுப்பு முயற்சிக்குப் பலத்த பின்னடைவைக் கொடுத்துள்ளது.

தமது இராணுவ பலத்தில் வைத்திருந்த அதீத நம்பிக்கை காரணமாக, 'முன்னோக்கிப் பாய்தல்' என்று பெயரிட்டு சிங்களப் படைத்துறைத் தலைமை நடாத்திய இராணுவ நடவடிக்கைக்கு இராணுவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தகுந்த பதிலடி கொடுக்கும் நோக்குடன், புலிப்பாய்ச்சல் என்று பெயர் சூட்டிய தலைவர் அவர்கள், அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் குடாநாட்டு மக்களைப் பேராபத்து ஒன்றிலிருந்து பாதுகாத்த அதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் இராணுவத் திமிருக்கும் சாட்டை அடி கொடுத்துள்ளார். அதே வேளை, குறித்த இந்தப்பதில்இராணுவ நடவடிக்கையை நடாத்த முன்னரே புலிப்பாய்ச்சல் என்று பெயர் சூட்டிய விதம் அந்த இராணுவ நடவடிக்கையின் வெற்றியில், அது ஆரம்பிக்கப்பட முன்னரே தலைவருக்கு இருந்த முழு நம்பிக்கையையும் கோடி காட்டுகின்றது.

தரை-கடல்-ஆகாயம் என மூன்று அரங்குகளிலும் சிங்களப்படைகளைக் குறிவைத்து நிகழ்ந்த புலிப்பாய்ச்சல், புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்றையும், சக்தி வாய்ந்த கட்டளைக் கப்பல் ஒன்றையும், நூற்றுக்கு மேற்பட்ட படையினரையும் அழித்து விட்டது. இதன் விளைவுகள் கொடுத்த நெருக்கடிகளினால் புதிதாக ஆக்கிரமித்த பகுதிகளை விட்டு, சிங்களப் படைகள் பின்வாங்கிச் சென்று விட்டன.

### படை எடுப்பு அபாயம் நீங்கவில்லை

குடாநாட்டு மக்கள் அனைவரையும் பீதிக்குள்ளாக்கிய சிங்களப் படைகளின் இராணுவ நடவடிக்கை ஒன்று புலிவீரர்களால் சிதறடிக்கப்பட்டாலும் கூட, குடாநாடு மீதான படையெடுப்பு அபாயம் இன்னமும் நீங்கிவிட வில்லை. எப்பாடு பட்டாவது யாழ் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவது என்பதே சந்திரிகா - ரத்வத்தை தலைமையின் போர்த்திட்டமாகும். குடாநாட்டின் பல்வேறு படைமுகாம்களில் இருந்தும் பல முனைகளூடாக, கட்டம் கட்டமாகப் படைகளை நகர்த்தி, குடாநாட்டை விழுங்கும் நாசகாரத்திட்டம் ஒன்றைச் சிங்களப் படைத்தலைமை தன்வசம் வைத்திருக்கின்றது. இதன் பொருட்டு கிழக்கில் இருந்தும், தெற்கில் இருந்தும் ஆயிரக்கணக்கான படையினரை எடுத்து, வடபகுதிக்கு அரசு அனுப்பிவைத்துள்ளது. அத்துடன், மேலும் மேலும் பல நூறு கோடி ரூபாய்களை செலவழித்து நவீன போர் விமானங்களையும் மற்றும் போராயுதங்களையும் அரசு வாங்கிக் குவித்து வருகின்றது.

### யாழ். மையமே சிங்கள அரசின் இலக்கு

யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றுவதே தங்களுடைய பிரதான இராணுவ இலக்கு என சிறிலங்காப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரத்வத்த கூறியுள்ளார்.

இதன் அர்த்தம், யாழ். நகரத்தையும் அதன் கட்டடங்களையும் கைப்பற்ற சிங்களப் படைகள் விரும்புகின்றன என்பது மட்டுமல்ல, மாறாக யாழ். குடாநாட்டை மையமாகக் கொண்டு மிடுக்குடன் செயற்படும் தமிழரின் ஆட்சி அமைப்பைக் கைப்பற்றுவது என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும்.

இதேவேளை, முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை படுதோல்வியடைந்து வாரம் சில கழிந்த பின்பும் கூட, அந்தச் செய்தியைச் சிங்கள மக்களுக்குத் தெரிவிக்காது அரசு மறைக்க முயல்கின்றது. முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று, மூன்று இலட்சம் தமிழர்களை இடம்பெயரவைத்த அந்த இராணுவ நடவடிக்கையின் போது சிங்களப் படைகள் கைப்பற்றி பின்னர் நிலைகொள்ள முடியாது பின்வாங்கிச் சென்ற பகுதிகளில் மக்கள் மீண்டும் சென்று குடியேறி விட்டனர். உண்மைநிலை இவ்வாறிருக்க, தான் கைப்பற்றிய பகுதிகளிலேயே இராணுவம் இப்போதும் நிலைகொண்டிருப்பதாகச் சந்திரிகா அரசு விடாப்பிடியாகப் பொய் கூறி வருகின்றது.

தனது சொந்த மக்களிடமே உண்மை கூறாது தொடர்ந்து பொய் கூறி வரும் சிங்கள மக்களையும், உலகத்தையும் ஏமாற்ற முயலும் சந்திரிகா அரசை, தமிழ் மக்களும் எவ்வாறு நம்ப முடியும்! அரசு -புலிகள் பேச்சு வார்த்தை காலகட்டத்தின் போதும் இவ்வாறுதான் புலிகளுக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியும் - பொறுப்புணர்ச்சி அற்ற விதத்தில் -தேவையற்ற அறிக்கை களை விடுத்தும் பேச்சு வார்த்தைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் சந்திரிகா அரசு நடந்து கொண்டது.

### மக்களின் உறுதியை உடைக்க சிங்கள அரசு முனைகிறது.


இது ஒரு புறம் இருக்க, விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழ் மக்கள் வழங்கும் ஆதரவைச் சிதைக்கவும், போருக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வரும் பொது மக்களின் ஆன்ம உறுதியை உடைக்கவும் அரசு விரும்புகின்றது. இந்த நோக்கத்துடன் தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான வகையில் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தி -சோகமும் துயரமும் மிகுந்த ஒரு அவல வாழ்வை அவர்கள் அனுபவிக்கும் படி செய்து, தமிழ் மக்களைப் பழிவாங்கவும் சந்திரிகா அரசு விரும்புகின்றது. முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது நிலங்களைக் கைப்பற்றுவதில் சிங்களப்படைகள் காட்டிய அக்கறையைவிட, மக்களைக் கொல்வதிலும் அவர்களை இடம் பெயரச் செய்வதிலும், பொருட்களைக் கொள்ளையடிப்பதிலும் காட்டிய அக்கறை அதிகமாக இருந்தது.

தமிழ் மக்களுக்குப் பேரழிவுகளை உண்டுபண்ணி, அதேவேளை புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி விட்டு, ஈழத் தமிழினத்தை அடிமை கொள்வதையே சந்திரிகா -ரத்வத்தை அரசு தனது கொள்கையாக வரித்துள்ளது, இந்தக் கொள்கையைத்தான் முன்னைய அரசும் நடைமுறைப்படுத்தியது, சிங்களப் பேரினவாதத்தின் இனவெறிக்கொள்கையும் இதுதான்.

### தமிழருக்கு எதிரான யுத்தப் பிரகடனம்

எது எவ்வாறு இருந்தாலும், இன்று சிங்கள அரசு தமிழருக்கு எதிரான ஒரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி உள்ளது. இந்த யுத்தத்தில் தனது படைகள் வெற்றிபெற வேண்டும் என்று அரசு துடியாய் துடிக்கின்றது. சிங்களப் பத்திரிகை உலகம், மற்றும் எதிர்க்கட்சிகள் உட்பட சிங்களதேசமே போருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி, சந்திரிகா அரசின் கரத்தை வலுப்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதியைச் சிங்கள படைகள் கைப்பற்றி விட்டன என்று அரசு வானொலி அறிவித்த போது, வெடி கொளுத்தி இனிப்புப்பண்டங்கள் வழங்கி வெற்றியைக் கொண்டாடி உள்ளது. இந்தக் 'கற்பனையான வெற்றிச்' செய்தி சிங்கள தேசத்தில் பரவியதும் அன்று துட்டகைமுனு அடைந்த மகிழ்ச்சியை, இன்று சிங்கள மக்கள் தாமும் பெற்றுவிட்டதுபோல உணர்ந்தனர் போலும்.

இதேவேளை, சிங்கள அரசு நடாத்திய ஒரு இராணுவ நடவடிக்கையை புலிப்பாய்ச்சல் நடவடிக்கையால் தமிழினம் முறியடித்துவிட்டது என்பது உண்மைதான். ஆயினும் பின்வாங்கிச்சென்ற படையினர் இப்போதும் பலாலிப் பெருந்தளத்தில்தான் உள்ளனர். கிழக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் படையெடுப்பிற்கெனக் கொண்டுவரப்பட்ட படையினரும், ஆயுத தளபாடங்களும் இப்போதும் குடாநாட்டுப் படைத் தளங்களிலேயே உள்ளன. அத்துடன் குடாநாடு மீதான படையெடுப்பு



நடவடிக்கைகளை இன்னமும் தாங்கள் கைவிடவில்லை என சந்திரிகா அரசும், படைத்தளபதிகளும் அறிக்கை மேல் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே அடுத்த ஒரு இராணுவப் படையெடுப்பைக் குடாநாடு எதிர்கொண்டபடியே உள்ளது என்பது உண்மை ஆகும்.

### தமிழினத்தைக் காப்பது வரலாற்றுக் கடமை

நெருக்கடி மிகுந்த இந்த வரலாற்றுச் சூழலில் இருந்து தமிழினத்தைப் பாதுகாக்கும் சரித்திரக் கடமை இன்றைய இளம் சமூகத்திற்கே உண்டு. போருடை தரித்து - போராயுதங்களுடன் எமது ஊர்களுக்குள் புக முயலும்

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் நன்கு போராடுவதால் தனிநாடு வந்துசேரும்

## குமார் பொன்னம்பலம்

## இலண்டனில் செவ்வி

> அண்மையில் இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் 25.07.95 இல் வழங்கிய வானொலிச் செவ்வி

கேள்வி-தாங்கள் இங்கு, இலண்டன் வரும் வேளையிலே, யாழ் மாவட்டத்திற்கான இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தவேளை, உங்கள் எண்ணங்களில் தோன்றிய உணர்வுகளை இப்போது நினைவு படுத்துவதானால் எப்படி இருந்தது?

பதில்-அதாவது நான் நினைக்கிறேன், இந்த அரசாங்கம் விடுதலைப் புலிகளை தலையிலை தட்டுவது, தமிழ்மக்களின் தலையிலை தட்டுவதாக நான் எண்ணுகிறேன். ஏனென்றால், இந்த அரசாங்கத்திற்கு எந்த ஒரு கட்டத்திலும் தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமொன்றும் அவர்கள் வைக்கவில்லை. இந்தக் கட்டத்திலே ஏதோ புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என்று ஆரம்பித்து, அண்மைக்காலத்திலே ஒரு அரசியல் திட்டம் சம்பந்தமான, ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய ஒரு கட்டம் வந்தபோது, அவர்களுக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலையிலே, இப்படியான ஒரு செயற்திட்டத்தில் இறங்கி மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்பப் பார்க்கிறார்கள் என்றுதான் நான் சொல்லவேணும். அதாவது முக்கியமாக, சிங்கள மக்களுடைய கவனத்தையும் திசைதிருப்பி, தமிழ் மக்களையும் அதேநேரத்திலே மட்டந்தட்டிவிட்டு, தங்களுடைய காலத்தைப் போக்கும் ஒரு நோக்கத்திலைதான் அவர்கள் இந்தச் செயற்திட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள்.

> அண்மைக்காலத்திலே ஒரு அரசியல் திட்டம் சம்பந்தமான, ஆலோசனைகளை முன்வைக்க வேண்டிய ஒரு கட்டம் வந்தபோது, அவர்களுக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலையிலே, இப்படியான ஒரு செயற்திட்டத்தில் இறங்கி மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்பப் பார்க்கிறார்கள் என்றுதான் நான் சொல்லவேணும். அதாவது முக்கியமாக, சிங்கள மக்களுடைய கவனத்தையும் திசைதிருப்பி, தமிழ் மக்களையும் அதேநேரத்திலே மட்டந்தட்டிவிட்டு, தங்களுடைய காலத்தைப் போக்கும் ஒரு நோக்கத்திலைதான் அவர்கள் இந்தச் செயற்திட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள்.

கேள்வி-அப்படியான வகையில் இந்த இராணுவ நடவடிக்கை தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட நடவடிக்கை என்கிற ரீதியிலே அதனைக் கண்டிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

பதில்-ஓம், கட்டாயமாக.

கேள்வி-அந்த வகையிலே இன்று ஏறத்தாழ பன்னிரண்டு தினங்கள் முடிவுற்ற நிலையிலே, இராணுவ நடவடிக்கைகள் பற்றி இருதரப்பட்ட செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இலண்டனிலேகூட, உங்களுக்கு இருந்த நிலையிலும் சில தகவல்களை அறிந்திருக்க முடியும். அந்தளவிலே இன்று அந்த நிகழ்வுகளுடைய எண்ணங்கள் எப்படி உங்கள் மனதைப் பாதித்திருக்கின்றது?

பதில்-எப்படிப் பாதித்திருக்கின்றது என்று சொல்வதிலும் பார்க்க, இந்தக் கட்டத்திலே தமிழர்கள் சார்பில் இராணுவத்தினுடைய நடவடிக்கைகளை நாங்கள் எதிர்நோக்கி, ஒருவாறு முன்னேறிக் கொண்டு வருகின்றோம் என்ற அந்தச் சந்தோசமும் எனக்கு உண்டு.

கேள்வி-நல்லது, அந்த அடிப்படையிலே சற்றுப் பின்னோக்கி சில மாதங்களுக்கு முன்னர் நடந்த செயற்பாடுகளை, அனுபவங்களை உங்களிடமிருந்து கேட்க ஆசைப்படுகிறேன். மிகக்குறிப்பாக, விடுதலைப் புலிகளுடைய போர் நிலைப்பாடுகளை விஸ்தரிக்க வேண்டிய ஓர் அறிவிப்பு, ஏப்ரல் 19ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதுவரையிலே ஓரளவிற்கு சர்வதேசத்தின் கண்களுக்காவது இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தன. நான்கு சற்றுப் பேச்சக்கள் நடந்து முடிந்தன. இந்த இடத்தினிலே நீங்கள் குறிப்பாகக் கொழும்புப் பகுதியில் நிலைகொண்டு இந்தத் தமிழர்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்திருக்கிறீர்கள். அரசுடனும் உங்களுக்கு ஒருவகையில் நெருக்கமானதாகவோ அல்லது மறைமுகமானதாகவோ சில நேரடியான உறவுகளை வைத்திருக்கக்கூடும்.

பதில்- இல்லை. அப்படி ஒன்றுமில்லை.

கேள்வி- நான் உறவுகள் என்று இங்கு குறிப்பிட்டது, தொடர்புகள் ஏதாவது செய்திகளை அறியக்கூடிய வாய்ப்புக்களை. அந்த அடிப்படையிலே எந்த உங்களுடைய எண்ணம், அதாவது சிறீலங்கா அரசினுடைய நிலைப்பாட்டில் ஒரு உண்மை நிலையினைக் கண்டீர்களா? அல்லது அந்த நிலைப்பாடு எப்படிப்பட்ட நிலையில் இருந்தது என்பதைத் தெரிவிப்பீர்களா?

பதில்-இல்லை. உண்மைநிலையைக் காணவில்லை. ஒரு பொய் வேசத்தைத்தான் நான் கண்டனான். அதாவது இந்த அரசாங்கம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு கடந்த 9 மாதங்களாக ஒன்றுமே இந்த விசயம் சம்பந்தமாக அவர்கள் ஆக்கபூர்வமாகச் செய்யவில்லை. ஆனபடியால்தான், அவர்களுடைய நிலையை ஏறக்குறைய மே மாதக் கடைசியிலே திட்டவட்டமாக அறியக் கூடியதாக இருந்தது. அதாவது, அரசாங்கத்தினுடைய அங்கமாக இருக்கின்ற ஒருசில கட்சிகள்கூட சொல்லியிருந்தார்கள் எனக்கு, ஒருவார்த்தையாவது அவர்கள் நமது பிரச்சினை சம்பந்தமாக எழுத்துமூலமாக கூறி இருக்கவில்லை என்று. அதை அறிந்த நான் உடனடியாக ஜனாதிபதிக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தை எழுதி, செயற்திட்டத்தை அவர்களுடைய ஆலோசனைகளை முன்வைக்கச் சொல்லி கேட்டேன்.

அப்படியான ஒரு எதிர்ப்பு அரசாங்கத்திற்கு இந்தத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஒன்றும் இல்லை என்ற அந்த ஒரு எண்ணம் எல்லோர் மத்தியிலும் இன்று நிலவுகின்றது. ஆகையால் இன்றைக்கு அவர்கள் சனிக்கிழமை தங்களுடைய ஆலோசனைகளை வெளிப்படுத்த இருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். இன்னொரு கட்டத்திலே, இன்னுமொரு இரண்டு வாரத்திலே கூடி வெளியிடப் போவதாக ஜனாதிபதி தமிழ்க்குழுக்களிடம் சொல்லி இருக்கின்றார். நேற்று, முந்தநாள் பத்திரிகையைப் பார்க்கும் பொழுது அவர்களுக்கே தங்களுடைய நிலைப்பாடு என்னென்று தெரியாமல் அல்லோல கல்லோலமாக அவர்கள் இருக்கிறார்கள்.

கேள்வி- இந்த நிலைக்கான குறிப்பான காரணம் என்னவாக இருக்கும்?

பதில்- நேர்மையின்மை, நேர்மையின்மை. இந்த அரசாங்கம் நேர்மையான ஒரு அரசாங்கமல்ல. இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற கவலையான விசயம் என்னவென்றால், நேர்மையற்ற இந்த அரசாங்கத்திற்கு உறுதுணையாக எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் இருக்கின்றார்கள் என்பதுதான் மிகவும் கவலைக்குரிய விசயம். நாங்கள், எங்களை மதிக்க முடியாமல் இருந்தால், எப்படி வேறொரு சாரார் எங்களை மதிக்கப் போகிறார்கள்! விளங்குதே! நாங்கள் எங்களை மதிக்காமல் அரசாங்கத்தினுடைய நடமாட்டத்திற்கெல்லாம் தாளம் போட்டுக் கொண்டிருந்தால், எங்களுடைய தலையிலே அவர்கள் அடிப்பார்கள்தானே! இதற்கு நாங்கள் எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகளைக் குறை சொல்லவேண்டும்.

> இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற கவலையான விசயம் என்னவென்றால், நேர்மையற்ற இந்த அரசாங்கத்திற்கு உறுதுணையாக எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் இருக்கின்றார்கள் என்பது தான் மிகவும் கவலைக்குரிய விசயம். நாங்கள், எங்களை மதிக்க முடியாமல் இருந்தால், எப்படிவேறொரு சாரார் எங்களை மதிக்கப் போகிறார்கள்? விளங்குதே! நாங்கள் எங்களை மதிக்காமல் அரசாங்கத்தினுடைய நடமாட்டத்திற்கெல்லாம் தாளம் போட்டுக் கொண்டிருந்தால், எங்களுடைய தலையிலே அவர்கள் அடிப்பார்கள்தானே!

கேள்வி- அப்படியானால், அந்த பலத்தை இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்குக் கொடுத்ததினால்தான் இந்தப் பிரச்சனை இவ்வளவு தூரம் மோசமானதென்று நினைக்கிறீர்களா?

பதில்- இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு நேர்மையற்ற அரசாங்கத்திற்கு நாங்கள் உதவி கொடுக்காமல், நாங்கள் எங்களுடைய ஆதரவை வாபஸ் பெறுகிறோம் என்று சொல்லி, அரசாங்கத்தினுடைய எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிராக நாங்கள் வாக்களித்தால், அப்போது அரசாங்கம் பயப்படுவார்கள். ஆனால் எங்களுடைய நடத்தை அப்படியாகவில்லை. நக்கவைச்சக் கொண்டு நாங்கள் இருக்கிறபடியால்தான், அவர்களும் இன்றைக்குக் கொடுக்கிறோம், நாளைக்குக் கொடுக்கிறோம்...! இந்தக் கட்டத்திலே ஒரு பாரிய போர் நடந்து கொண்டிருக்கும் பொழுது, நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் செத்துக் கொண்டிருக்கிறபோது, அவர்கள் சொல்லுகிறார்கள் தங்களுடைய ஆலோசனைகளை சனிக்கிழமை வெளியிடப்போவதாக. இது என்ன நடவாக்கம். **இந்தக் கேள்வி கேட்கிறதிற்கு ஒரு தமிழனும் முற்படுவதாக இல்லை.** அப்படியென்றால் எப்படி நாங்கள் வாழ முடியும். இதற்குப் பரிகாரம் எங்களுடைய கையில்தான் இருக்கு.

கேள்வி- உண்மைதான். இந்த அடிப்படையில் விடுதலைப் புலிகள் இன்று எடுத்திருக்கின்ற இந்த நிலைப்பாடு, அதுகுறித்து உங்கள் அரசியல் அனுபவத்தில் எப்படி அதை நீங்கள் விளக்குவீர்கள்?

பதில்- என்ன நிலைப்பாடு?

கேள்வி- இன்று நீங்கள் குறிப்பிட்டவாறு உங்களுடைய கருத்துப்படியே நான் கேட்கின்றேன், இப்படிப்பட்ட

**தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1987 ஒப்பந்தம்



# இந்தியாவின் அழுத்தமும் தலைவரின் உடையாத உறுதியும்

**1987** தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு 'தத்துக்' கழிந்த ஒரு முக்கிய ஆண்டு.
'ஒப்பறேசன் லிபறேசன்', 'இலங்கை- இந்திய ஒப்பந்தம்', 'இந்திய-புலிகள் போர்' என்று, 'செக்குக்குள் போடப்பட்ட தேங்காய்க் கொப்பராக்கள் போல'-இந்திய, சிங்கள அரசகளால் தமிழீழ விடுதலைப் போராட்டம் நசுக்கிப் பிழியப்பட்ட ஒரு 'சனியன்' ஆண்டு.
'இந்த வழியால்தான் செல்ல வேண்டும்' என்று எமது மக்களுக்கு இந்திய -சிங்கள அரசகள் 'திசைவழி' காட்ட முயன்றபோது- 'இல்லை, இப்படித்தான் செல்வோம்' என அடித்துக்கூறிவிட்டு, அனைத்துத் 'தத்து'க்களையும் ஏற்றிக்கொண்டு, போராட்டத் தேரை தலைவர் பிரபாகரன் செலுத்த முயன்ற ஒரு முக்கிய ஆண்டு.

1987 யூலை மாதம்.
ராஜீவ்-ஜேஆர். ஒப்பந்தம் கருத்தரித்த நாட்கள் அவை. இந்த ஒப்பந்தத்திற்கு தலைவரின் ஒப்புதல் தேவைப்பட்டது. அப்போது தலைவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்.
தலைவரை இந்தியாவிற்குக் கூட்டிச்சென்று, ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கேட்பதுதான் இந்திய அரசின் எண்ணம். ஏனெனில், ஒப்புதல் தரமறுத்தால், அதை மிரட்டிப் பெறுவதற்குத் தலைவரை இந்தியாவில் வைத்திருப்பதே சிறந்ததென, இந்திய அதிகாரிகள் எண்ணினர்.
இந்திய அதிகாரிகள் தயாரித்த ஒரு சூழ்ச்சித் திட்டத்துடன், கொழும்பிலிருந்த இந்தியத் தூதரகத்தின் அதிகாரியான திரு. பூரி யாழ்ப்பாணம் வந்து, தலைவரைச் சந்தித்தார்.
'ராஜீவ்காந்தி உங்களைச் சந்தித்து ஒரு முக்கிய விடயம் பற்றிக் கதைக்க விரும்புகிறார். நீங்கள் டெல்லிக்கு வரவேண்டும்' என்று, தலைவரிடம் பூரி கேட்டுக்கொண்டார். ஆயினும், ஒப்பந்தம் பற்றி பூரி வாய்திறக்கவேயில்லை.
ஏதோ சூழ்ச்சி வலை பின்னப்படுகிறது என்பதைத் தலைவர் ஊகித்துக் கொண்டாலும், இந்தியாவின் பிரதமர் அழைக்கின்றார் என்பதால் அதை மறுக்க முடியவில்லை.
டெல்லி செல்லத் தலைவர் இசைந்தார்.
23-07-1987 அன்று, இந்திய விமானப்படை எம்ஐ.8 உலங்கு வானூர்தி, சதுமலை அம்மன் கோவிலுக்கு முன்னால் உள்ள வயல்வெளியில் இறங்கி, தலைவரை ஏற்றிக் கொண்டு பறந்தது. அங்கிருந்து விமானம் மூலம், தலைவர் டெல்லிக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.
டெல்லியில் 'அசோக் விருந்தினர் விடுதி'யில், தலைவரும் அவருடன் கூடச்சென்ற அன்ரன் பாலசிங்கம், லெப். கேணல் தீலிபன் ஆகியோரும் தங்கவைக்கப்பட்டனர். விடுதியின் உள்ளும் புறமும் விசேட கொமாண்டோப் படையாகிய 'கறுப்புப் பூனை'களால் நிரம்பி வழிந்தது. அங்கே மிகவும் சிறந்த முறையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதேவேளை, தலைவரும் அவருடன் கூடச்சென்றோரும், 'வெளியில் போக முடியாது', 'தொலைபேசிகளைப் பயன்படுத்த முடியாது' என்று கட்டுப்பாடுகளை விதித்தபின், 'டிக்சிற் வந்து உங்களுக்கு விளக்கம் தருவார்' என்று கூறிவிட்டு இந்திய அதிகாரிகள் சென்றனர்.
ஒருசில மணி நேரத்தின் பின், டிக்சிற்றும் வெளிவிவகார அமைச்சின் சில உயர் அதிகாரிகளும் விடுதிக்கு வந்து, தலைவரைச் சந்தித்தனர்.
'இந்திய-இலங்கை அரசுகள் இணைந்து தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டத்தைத் தயாரித்துள்ளனர்' என்று தனது பேச்சைத் தொடங்கிய டிக்சிற் அவர்கள், இந்திய-இலங்கை ஒப்பந்த நகலைத் தலைவரிடம் கொடுத்துவிட்டு,
'ஒரு மணி நேரத்துக்குள் இதை வாசித்துவிட்டு, உங்களது பதிலைச் சொல்ல வேண்டும்' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்,
'இது இரு அரசுகள் செய்தவொரு ஒப்பந்தம். இதில் எவ்வித திருத்தங்களையும் நீங்கள் செய்ய முடியாது. இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றே நாங்கள் (இந்தியா) எதிர்பார்க்கின்றோம்!' என இடக்குத்தனமாகக் கூறிவிட்டு, டிக்சிற்றும் அவரது குழுவினரும் சென்றனர்.
டெல்லிக்குக் கூட்டிவரப்பட்டதன் நோக்கம் தலைவருக்கு அப்போது தான் தெரிந்தது.
அவசரம் அவசரமாக ஒப்பந்த நகலைப் படித்தார்.
'ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணி நேரத்துக்குள் (03 நாட்கள்) புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து விட வேண்டும்' என்றும், (எந்தவித அதிகாரமற்ற) 'மாகாண சபைத் திட்டத்தைப் புலிகள் ஏற்கவேண்டும்' எனவும் ஒப்பந்தம் கூறியது. அத்துடன், தமிழீழ மக்களை அரசியல் அநாதைகள் ஆக்கும் இன்னும் பல அம்சங்களும் அந்த ஒப்பந்தத்தில் இருந்தன.
சொன்னபடி சரியாக ஒருமணி நேரம் கழித்து, டிக்சிற்றும் அவரது சகாக்களும் தலைவரிடம் வந்தனர். வந்த உடனேயே அதிகாரத் தொனியுடன் டிக்சிற் உரையாடத் தொடங்கினார்.
'உங்களது முடிவைச் சொல்லுங்கள்' எனத் தலைவரிடம் கேட்டார்.
டிக்சிற்றைக் கூர்ந்து நோக்கியபடி, நிதானத்துடன் தலைவர் சொன்னார்-
'எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்கமாட்டோம்.'

'ஏன் ஏற்க முடியாது?' சீற்றத்துடன் குரலை உயர்த்தியபடி

> **தலைவரை இந்தியாவிற்குக் கூட்டிச்சென்று, ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கேட்பதுதான் இந்திய அரசின் எண்ணம். ஏனெனில், ஒப்புதல் தரமறுத்தால், அதை மிரட்டிப் பெறுவதற்குத் தலைவரை இந்தியாவில் வைத்திருப்பதே சிறந்ததென, இந்திய அதிகாரிகள் எண்ணினர்.**

டிக்சிற் கேள்வி எழுப்பினார்.
இந்திய மத்திய அரசின் சூழ்ச்சி அரசியலையும், டிக்சிற்றின் ஆத்திரமூட்டும் அணுகுமுறைகளையும் மனதிற்குள் புதைத்துவிட்டு, தலைவர் விளக்கத் தொடங்கினார்-
'15 ஆண்டுகளாக நாங்கள் இரத்தம் சிந்தி கட்டி வளர்த்த இந்த விடுதலை இயக்கத்தை, 72 மணி நேரத்துக்குள் கலைத்துவிட வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுவதை, எம்மால் ஏற்க முடியாது.'
தெளிவாகவும் உறுதியாகவும் தலைவர் அவர்கள் தொடர்ந்து சொன்னார்-
'ஒரு அரசியல் தீர்வு வரமுன் ஆயுதங்களைக் கீழே போடச்சொல்லியுள்ளீர்கள். எமது மக்களின் தற்பாதுகாப்புக் கருவிகளை எந்தவித உத்தரவாதங்களும் இல்லாமல் கீழே வைத்துவிட நாங்கள் தயாராக இல்லை. அத்துடன் இது எமது மக்களின் ஒப்புதல் இன்றிச் செய்யப்பட்ட ஒரு உடன்பாடு. இதை நாம் ஏற்க மாட்டோம்.'
தலைவர் கூறி முடிக்க முன்னரே ஆத்திரத்துடன் டிக்சிற் சீறினார்-
'நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, இது நடைமுறைக்கு வந்தே தீரும்.'
ஒரு வன்ம உணர்வு முகத்தில் கொப்பளிக்க, குரலை உயர்த்தியபடி டிக்சிற் தொடர்ந்தார்-
'ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால், நாங்கள் எமது (இந்தியா) இராணுவத்தைக் கொண்டு உங்களது ஆயுதங்களைக் களைவிப்போம்.'
தலைவரையும் அவருடன் கூடச்சென்ற குழுவினரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, தனது சுட்டு விரலை ஆட்டியபடி டிக்சிற் தொடர்ந்தார்-
'இப்போது எங்களுடைய பாதுகாப்பில்தான் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்' என்று அதட்டிவிட்டு, தலைவரை நோக்கி வார்த்தைகளை அறுத்து- உறுத்துச் சொன்னார்.
'நீங்கள் இங்கிருந்து திரும்பிப் போவதற்கும் உத்தரவாதமில்லை.'
டிக்சிற்றின் மிரட்டல்களும், பண்பில்லாத சொற்பிரயோகங்களும், பகைமையை வெளிப்படுத்தும் முகபாவங்களும் தலைவர் பிரபாகரனை பொறுமையின் எல்லைக்கு இழுத்துச் சென்றன. ஆயினும், வழமை போலவே தலைவர் நிதானத்தைக் கடைப்பிடித்தார்.
டெல்லிக்கு அழைக்கும் போதே, இத்தகைய ஒரு சூழ்ச்சி நடவடிக்கை பற்றிய சந்தேகத்துடனேயே தலைவர் டெல்லி சென்றிருந்தார். ஆயினும், அது இப்படி ஒரு கொடூர-துரோக வடிவத்தில் இருக்கும் என்று அப்போதுதான் தலைவருக்குத் தெரிந்தது.
'தனது உயிரைப் பணயம் வைத்து, அதற்குப் பதிலாக தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தைப் புதைகுழியில் இடமுனையும் இந்தியாவின் சதி நோக்கத்தை', தலைவர் உணர்ந்து கொண்டார்.
'தன்னுடைய உயிரா! தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தின் உயிரா?' என்ற கேள்விக்கு, எந்தவித குழப்பமும் இன்றி தலைவர் முடிவு எடுத்தார். எடுத்த முடிவை நிதானமாக டிக்சிற்றுக்குச் சொன்னார்.
'என்னிடம் ஒரு கொள்கை இருக்கின்றது. அந்தக் கொள்கைக்காகச் சாவை அரவணைக்க நான் எப்போதுமே தயாராக இருக்கிறேன்'
என்று கூறிவிட்டு, டிக்சிற்றைப் பார்த்தபடி தலைவர் சொன்னார்-

> **தான் கொண்டுவந்த அனைத்து ஆயுதங்களையும் பிரயோகித்துவிட்டு, டிக்சிற் அவர்கள் இப்போது வெறும் கையுடன் நின்றார். அவர் பயன்படுத்திய எந்தவொரு ஆயுதமும், தலைவர் பிரபாகரனைத் தாக்கி நிலத்தில் வீழ்த்தவில்லை என்பதை அறிந்து மனம் புழுங்கியபடி இருந்தார் டிக்சிற் அவர்கள்.**

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மேஜர் சரித்திரன்(ஜஸ்ரின்)


மேஜர் உருத்திரன்(கயா)


மேஜர் பைந்தமிழன்(சுதா)


மேஜர் ரவிக்கா


மேஜர் நளன்(கிரேசசன்)


மேஜர் வெள்ளை


கப்




கப்டன்முருகன்


கப்டன் அருளப்பன்(நரேஸ்)


கப்டன்பெருந்தேவன்


லெப். ஐயாத்துரை(அமிர்)


லெப். சிரேஸ்ரன்(மாதவன்)


லெப். கொள்கைமாறன்


லெப். சொல்விளம்பி


லெப். மறைமகன்


லெப்குட்டிமணி


லெப். மதியரசன்


லெப். சிவம்


லெப். வரதன்


2-ம் லெப் ராஜதரன்


2-ம் லெப் புவிதரன்


2-ம் லெப் யோகலிங்கம்


2-ம் லெப் வசந்தா


2-ம் லெப் கண்மணி


2-ம் லெப் வினோ


2-ம் லெப் இசைவாளன்


வீரவேங்கை பகீரதன்


வீரவேங்கை புஸ்பநிதன்


வீரவேங்கை வர்ணச்சந்திரன்


வீரவேங்கை அரசநாயகன்


வீரவேங்கை சந்திரசேகரம்


வீரவேங்கை கலைவதனி


வீரவேங்கை தென்றல்


வீரவேங்கை மலையமான்


வீரவேங்கை கலையரசன்


வீரவேங்கை மன்னன்


வீரவேங்கை முத்தப்பன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


...வரை


கப்டன் தவம்


கப்டன் அருந்ததி


கப்டன் இதயன்


கப்டன் இளங்குமணன்


கப்டன் நாவலன்


கப்டன் ஈழச் செல்வன்

## வணக்கம்

ுலிப்பாய்ச்சல்
தாக்குதல்
டிக்கையின்போது
ரச்சாவடைந்த
பாராளிகளுள்
ரு பகுதியினர்

Liberation Tigers Of
TAMIL EELAM




லெப். சோமநாதன்


லெப். லலிதாதேவி


லெப். சமங்கலி


லெப். மாணிக்கம்


லெப். சிறீதரன்


லெப். கண்ணன்


லெப். சித்திரன்


லெப். குகன்


லெப். சுரேந்திரன்


லெப். தீசன்


2-ம் லெப் குலமகள்


2-ம் லெப் மலையரசன்


2-ம் லெப் குமரன்


2-ம் லெப் பாரி


2-ம் லெப் வல்லவன்


வீரவேங்கை உரிமைவீரன்


வீரவேங்கை தவச்செல்வி


வீரவேங்கை மதனா


வீரவேங்கை சர்மிளா


வீரவேங்கை நிதி


வீரவேங்கை மலரவன்


வீரவேங்கை நிலவன்


வீரவேங்கை ஜெகன்


வீரவேங்கை சிந்துஜன்


வீரவேங்கை வேலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த வாழை இலைகள் பச்சைப் பசேலென்று, தொடுகின்ற போதே மனதிற்குள் சந்தோசத்தைத் தெளிப்பதாகச் சட்டென்று உணர்ந்தாள் புவனேஸ்வரி. இதன் ஸ்பரிசம் தன் புறங்கையைத் தடவினாற் போல இருந்தது. இத்தகைய கணப்பொழுது சந்தோசம், அது உடனேயே அவளிலிருந்து உதிர்ந்து விட்டதெனினும் அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. வரிசை வரிசையாகக் குழந்தைகள் போல பச்சைப் பசேலென்று அணிவகுத்து நிற்கின்ற வாழைக்கன்றுகள். இவை ஒவ்வொன்றும் நிலத்தில் தடம்பதித்து, இலை அவிழ்ந்து துளிர் மஞ்சள் கரும்பச்சையாகி பின்னர் கரும் பச்சை இலைகளை விரித்து அந்த வாழைக்கன்றுகள் வளரிளம் பிள்ளைப் பருவத்தைத் தொட்டு நிற்கும் இந்தக் கணப்பொழுது வரை அவள் ஒவ்வொரு நாளும் இப்படித் தான் இவற்றின் இலைகளைத் தொட்டுப் பார்த்து தன்னை மறந்து போய்விடுகிறாள். அவளின் அருகே மிகவும் துடுக்குத்தனமாக கழுத்தைச் சரித்துப் பார்த்தபடியே இருக்கிற ஓணானை அவள் காணவில்லை. புவனேஸ்வரிக்கு ஓணானென்றால் வெறுப்பு. எரிச்சல். அதன் குரூரமான கண்கள், மொறமொறப்பான உடல். அதைக் கண்டால் உடலே

கிராமத்தைப் பற்றித்தான் பேச்சு. அவர்களுக்கு இணுவில்தான் சொந்த இடம். சொந்தமாக வாழைத்தோட்டம் இருந்தது. இதேபோலத்தான் செழிப்பான மண்ணும், பசுமையான வாழைக்கன்றுகளும்.

இப்போது எப்படியிருக்கு! கனகமே ஒரு வெள்ளிக்கிழமையன்று கண்ணீர் மல்கக் கூறினாள்: "என்ன மாதிரி இருந்த நிலம்,



விழுந்தது திரவத்துளி உடல் சிலிர்ந்தது. நடுங்கிற்று. எரிச்சலும் வேதனையுமாய் கலைந்த தூக்கக் கலக்கத்தோடு முதுகுப் பக்கம் அனிச்சையாகவே சென்றத. இடதுகை. இடது கையில் கொதித்து விழுந்தது இன்னொரு திரவத்துளி.

"ம்ம்மா" என்று கதறிவாறே எழுந்தாள்.

"என்ன பிள்ளை–என்னணை அது!" பதறிவாறே உள்ளே வந்தார்

அண்ணனையும் தேடிக் கண்டுபிடிச்சுக் கொண்டு எங்கடை ஊருக்கே போயிடுவம். மானத்தோடை அங்கேயே கொஞ்ச நாளைக்கெண்டாலும் இருந்து செத்துப் போயிடலாம். அடிமையை விடக் கேவலமான வாழ்க்கையாப் போச்சு."

கணபதிப்பிள்ளை மௌனமாய் இருந்தார். குண்டு வீச்சில் இறந்துபோன மனைவியையும் எரிந்து கருகிப்போன வீட்டையும் தனக்கு அருகே உணர்ந்தார்.

"ஐயா எங்கடை மண்ணுக்குப் போவம், யாருக்கும் சுமையில்லாமல், யாருக்கும் பயமில்லாமல் எவரையும் கெஞ்சிப் பிழைக்காமல். இன்னுங் கொஞ்ச நாளைக்கு இஞ்சை இருந்ததெனண்டால் எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும்."

விம்மல் அவள் வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி இட்டது. கணபதிப்பிள்ளை சால்வைத் துண்டால் உடம்பில் பொங்கி வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"அண்ணனைப் பற்றிய மறுமொழி வரட்டும் பிள்ளை, போயிடுவம். நீ சொல்லுறதை நான் இல்லையெண்டு சொல்லேல்லை"

பூந்தென்றலாய் கற்றைக் காற்று தனது மனதினுள் தண்மையுடன் நிறைந்ததை உணர்ந்தாள் அவள்.

"நீங்க மெய்யாகவே சொல்லுறியள்!" பரவசம்.

"ஓம் பிள்ளை."

"கடவுளாணை." அவள் குழந்தையாய் அவரைப்பார்த்தாள். மெல்லச் சிரித்தார் அவர்: "நீ இவ்வளவு சொல்லுறபோது நான் எப்படி நாச்சியார் அதைத் தட்டி நடக்கிறது." அவள் எல்லா வெம்மைகளிலிருந்தும் அந்தக் கணத்தில் விடுபட்டாள். கண்களில் நீர்த்திரை மறைத்தது. தன் வீட்டு முற்றத்தில் நின்றாள். அணிற்பிள்ளைகள் விளையாடும் மாதுளை

# சொல்லக் கொதிக்குது நெஞ்சம்

கூசிப்போகும். அவளுக்கு, கிட்டத்தட்ட அந்த ஓணானைப் போலவேதான் அந்த அதிகாரியும் இருந்தான். அதே கண்கள், பசித்த பார்வை. வெறுப்பூட்டும் வார்த்தைகள். அள்ளித் தெளிக்கிற ஏளனம். எதிலும் தளும்பி நிற்கிற குரூரம். மஞ்சளும், சிவப்பும் கலந்த வண்ணமாய் ஒரு இதழவிழ்ந்த மலர் போல் மஞ்சட் சுருளாய் நிமிர்ந்திருந்த வாழைக்குருத்தின் உச்சியிலே சிறகுகள் நடுங்கி வந்தமர்ந்த வண்ணத்துப் பூச்சியை நினைத்தாள். அவள் சுப்பிரமணியத்தின் நினைவு வந்தது. அவனுக்கு வண்ணத்துப் பூச்சியென்றால் மிகவும் ஆசை. அவை பறப்பதை, உட்கார்வதை, விநோதமாகச் சுற்றிவருவதைப் பேச்சற்றுப் பார்த்துக் கொண்டிருப்பான். ஒரு நாள்க்கூட

## செ. யோகநாதன்

அவற்றை அவன் தொட்டதில்லை. "அதை அதன்பாட்டிலேயே விட வேணும்" என்பான், பெரிய மனிதனின் தோரணையில், அவளது அண்ணன் பூவைக்கூடப் பறிக்கத் தயங்குகிற இரக்கம். அவளின் கண்கள் கலங்கின.

பார்க்கப் பார்க்க ஆசைவரும். இப்போ செல்லடிச்சு, நெருஞ்சி முள்ளும், இக்கிரியும் நாகதாளியும் பற்றையாய்ப் போயிருக்கிற இடம். நினைச்சாலே அடிவயிறு பற்றி எரியுது".

புவனேஸ்வரியின் மனம் கனத்தது. சொந்த நிலமும், வீடும், வாழைத்தோட்டமும் உள்ள கனகமும், பரஞ்சோதியும் இப்போது தினக்கூலியாக ஆறு ரூபா வாங்கிக் கொண்டு அகதி முகாமில்.

மூக்கைச் சீறிக்கொண்டாள் புவனேஸ்வரி. இரண்டு கிழமை அவளுக்கு சளி பிடித்தது. கல்பாரில் கட்டப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் அகதியாய் வாழத்தொடங்கியதிலிருந்து இப்படித்தான். கல்படை படையாகத் துருத்தித் தெரியும். அந்த ஒதுக்குப் புறத்தில் சின்னச் சின்னக் குடியிருப்புகளாய் அந்த அகதிமுகாம். நூற்றியெட்டுக் குடும்பங்கள். எப்போதும் கொதித்துக் கொண்டிருக்கிற நிலம். வெளியே இருந்து பரட்டைக் காடுகளை அளைந்து சலித்து மூர்க்கமாக வீசும் காற்று. அனல் ஊசியாய் உடலினைத் துளைக்கும். வெயிலைப் பார்க்க கண்கள் எரிந்து கலங்கும், வலித்து நீர் சொரியும். இதைவிட அச்சமூட்டுகிற வீட்டுக்கூரை. தாரையும், காகிதத்தையும் கலந்து

கணபதிப்பிள்ளை.

"ஐயா முதுகுகிலை பாருங்க"

முழங்கையைப் பார்த்தவாறே தகப்பனுக்கு முதுகு திருப்பினாள். முதுகுச் சட்டையில் கொட்டைப் பாக்குப் பரிமாணத்தில் திரண்டு கறுப்பாய் பளபளக்கிற தார்த் திரவம்.

பிரயத்தனத்துடன் அந்தப் பாதி திரவமும் பாதிக்கட்டியுமாய் இறுகிப் போன தார்த்திரட்டை முதுகுச் சட்டையிலிருந்து இழுத்தெடுத்தார். கணபதிப்பிள்ளை உடலெங்கும் நொந்தது.

"கூரையிலுள்ள சீட் தாராலை செய்தது போல இருக்குது. வெய்யிலிலை அது உருகிவிழுகுது. கடவுளே, என்ன அநியாயம் இது–முழங்கையைக் காட்டு நாச்சியார்."

வலியினால் உதடுகள் துடி துடிக்க, தார்த்திரவம் சொட்டிலேசாக அள்ளுண்டு சிவந்துபோன முழங்கையை அவருக்குக் காட்டினாள் புவனேஸ்வரி. கண்ணீர் மல்கிற்று.

பின்னர் 'டொப்டொப்' என்ற மெல்லோசையுடன் நிலத்தில் தெறித்த தார்த் திரவத்தை வெறுமையாகவே பார்த்தாள். அவர் மனதில் அக்கினித் துளிகள் கொட்டின. நிலத்திலும் அனல் வெம்மையாய் விரிந்து கொண்டிருந்தது.

"திண்ணைக்குப் போவம் வா பிள்ளை." "முழங்கைக்கு ஏதன் மருந்து பூச வேணுமையா." வேதனையோடு முனகினாள்.

"யாரைக் கேட்டுக் கொண்டு வெளியிலை போறது! அதிகாரிகள் யாருமில்லையே."

அந்த ஓணானது முகம் மனதிலே தோன்றிற்று. வக்கிரமாய்ப் பார்த்தது. அசிங்கமாகச் சிரித்தது. உறுமிற்று.

அவள் வெளியே எரியும் வெயிலைப் பார்த்தாள்.

"ஐயா எதுக்கு இஞ்சை வந்தம். வாருங்க

மரங்களையும் முருங்கைகளையும், வாழைக்கன்றுகளையும் ஆவலோடு தொட்டாள். வெளியே எரியும் காற்றையும் வெயிலையும் மானசீகமாக லேசான துணியைப் போல உதறி வீசினாள்.

"ஓ–புவனேஸ் புவனேஸ்" என்ற குரலில் கவனம் மண்ணினில் பரவ, தன்னை சுயத்துக்கு கொண்டு வந்தவள் எதிரே நின்ற கனகத்தையும் பரஞ்சோதியையும் தயக்கத்தோடு பார்த்தாள். பின்னர் கைகளை உதறியவாறு "போவமா!" என்றாள்.

கனகம் அவளைப் பரிவோடு பார்த்தாள். ஒரு செழித்த வாழை போல அழகாக இருந்தவள் புவனேஸ்வரி. இரண்டு ஆண்டுகளில் எப்படி ஆகிப்போய்விட்டாள்! குலை வெட்டி நிலை சரிந்து உடலெல்லாம் காய்ந்து பட்டை உதிர்ந்த வயதான வாழை மரம்போல.

"என்னணை நெடுநேரமாக யோசினையில நிண்டனி." இரக்கமாகக் கேட்டாள் பரஞ்சோதி.

"ஒண்டுமில்லை"

"ஆர் ஆருக்கு ஆறுதல் சொல்லிறது! மங்கையர்க்கரசியாரும் நேற்று முழுதும்

**புவனேஸ்வரிக்கு ஓணானென்றால் வெறுப்பு. எரிச்சல். அதன் குரூரமான கண்கள், மொறமொறப்பான உடல். அதைக் கண்டால் உடலே கூசிப்போகும். அவளுக்கு, கிட்டத்தட்ட அந்த ஓணானைப் போலவேதான் அந்த அதிகாரியும் இருந்தான். அதே கண்கள், பசித்த பார்வை. வெறுப்பூட்டும் வார்த்தைகள். அள்ளித் தெளிக்கிற ஏளனம். எதிலும் தளும்பி நிற்கிற குரூரம்.**

தானே சுதாகரித்துக் கொண்டு மீண்டும் வாழைக்கன்றுகளுக்கு நீர் வார்க்கத் தொடங்கினாள் அவள். தூரத்தில் பரஞ்சோதியும், கனகமும் சத்தமாகக் கதைத்துக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது. பரஞ்சோதிக்கும், கனகத்திற்கும் எப்போது பார்த்தாலும் இணுவில்

உருவாக்கிய அட்டையினால் வேய்ந்த கூரை. அனலடிக்கின்ற ஞாயிற்றுக்கிழமையன்று-வந்த புதிதில் கவலையும், களைப்புமாக படுத்திருந்தாள் புவனேஸ்வரி. அசதியில் புதைந்த நித்திரை.

சட்டென்று முதுகுப்புறமாக கொதிப்புடன்



www.tamilarangam.net



அழுது கொண்டிருந்தவ.'
'மகளை நினைச்சோ?'-சோர்வோடு கேட்டாள் புவனேஸ்வரி.
'ஓம்'
'டொக்டர் என்ன சொன்னவராம்?'
'பிள்ளை அனேகமாகச் செத்துத்தான்

**கனகம் அவளைப் பரிவோடு பார்த்தாள். ஒரு செழித்த வாழை போல அழகாக இருந்தவள் புவனேஸ்வரி. இரண்டு ஆண்டுகளில் எப்படி ஆகிப் போய் விட்டாள்? குலை வெட்டி நிலை சரிந்து உடலெல்லாம் காய்ந்து பட்டை உதிர்ந்த வயதான வாழை மரம்போல.**

பிறக்குமெண்டு சொன்னவராம். நல்ல இரக்கமான மனுசன், அவர் எங்களிலை சரியான இரக்கம் வைச்சிருக்கிற மனுசன்'
கனகம் வெறுமையாகப் புவனேஸ்வரியைப் பார்த்தார். 'ஏன் அப்பிடிச் சொல்லுகிறார்?'
'இந்த முகாமிலை நாங்க குடிக்கிற தண்ணீர் சரியில்லையாம். இந்தத் தண்ணீரைக் குடிச்சதாலை கர்ப்பத்திலை ஏதோ கிருமி பிடிச்சிட்டுதாம்.'
'கடவுளே-அப்போ பாக்கியமக்காவும் ராணியும்.' அவையள் இன்னும் டொக்டரிட்டைக் காட்டப் போகேல்லை. ஆனால் பயந்து கொண்டிருக்கினம்.'
'மாசத்திலை பத்துநாள் கூடச் சீவிக்கப் போதா உதவி, மாட்டுக் கொட்டிலைப் போல வீடு, நாளுக்கொரு சட்டம். அங்கையிருந்து வெளிக்கிடுகிறபோது ரவி அண்ணன் போகாதை பிள்ளை எண்டு கும்பிட்டுச் சொன்னவர்.'
'மங்கையற்கரசி யாரின்ரை மருமகள்! அங்க என்ன வசதியோடை இருந்த ஆள். ரெண்டு வீடு, வயல், தென்னங்காணி ராசாத்தி போலை அன்பரசியை வைச்சிருந்தவராம்'.
பரஞ்சோதி பெரு மூச்செறிந்தாள். 'எப்போ நாங்க எங்கடை மண்ணிலை போய் நிம்மதியாகச் சீவிக்கப் போறம்!'
கொழுந்து விட்டெரியும் நெருப்பும் கருகிப் போன தாயின் உடலும், புவனேஸ்வரியின் கனவிலும், நினைவிலும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன.

**கொழுந்து விட்டெரியும் நெருப்பும் கருகிப் போன தாயின் உடலும், புவனேஸ்வரியின் கனவிலும், நினைவிலும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. திடீரென வீரிட்டு அலறுவாள். தலை தலையாக அடித்துக் கொள்வாள். மறுகணமே மௌனமாகி திகைத்துப்போய் அசைவற்றிருப்பாள். பிறகு விம்மி, விம்மிஅழுவாள்**

திடீரென வீரிட்டு அலறுவாள். தலை தலையாக அடித்துக் கொள்வாள். மறுகணமே மௌனமாகி திகைத்துப்போய் அசைவற்றிருப்பாள். பிறகு விம்மி, விம்மி அழுவாள்: "அம்மா, அம்மா. எங்களின்ரை கண்ணுக்கு முன்னாலையே எரிஞ்சு கருகிப் போனியளே-என்ரை அம்மா."
கணபதிப்பிள்ளை வாயைப் பொத்திக் கொண்டு விசும்புவார். அவரது மகன் சுப்பிரமணியம் கறை படிந்த வானத்தையே வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நிற்பான்.
என்ன இருக்கிறது அவர்களிடம்! இந்தக் குண்டு வீச்சில் எல்லாமே போய்விட்டது படிக்கிற புத்தகங்களிலிருந்து உடுக்கிற துணிகள் வரை இப்படி எத்தனை பேர். ஐயாவிடம் கந்தசாமி சொன்னார்.
"உலகநாடுகள் எல்லாம் இனக் கொலைக்கு ஆட்பட்டிருக்கிற இலங்கைத் தமிழருக்கு அடைக்கலம் கொடுக்குது. ஐரோப்பிய நாடுகளிலை அகதியாய்ப் போனால் அகதி அந்தஸ்து, வேலை கிடைக்கும் வரை உதவிப்பணம், வீட்டு வசதிசு பண்ட பாத்திரம் எல்லாம் குடுக்கிறார்கள். படிக்கிற வசதி பிள்ளைகள் பிறந்தால் உதவிப் பணம்.'
கணபதிப்பிள்ளை மௌனமாக இருந்தார். "இதை நான் காரணத்தோடைதான் உங்களுக்கு சொல்லுறன். புவனேஸ்வரியின்ரை நிலைமை மெத்தக் கவலையாயிருக்கு. இந்தச் சூழ்நிலையில் அவள் இருந்தால் இன்னுங் கொஞ்ச நாளிலை அவளுக்குப் பைத்தியம் பிடிச்சிடும். அதை விட சுப்பிரமணியனும் மூளைசாலி. படிச்சானெண்டால் பெரிய ஆளாய் வந்திடுவான் அருமையான பிள்ளைகள் உங்களுக்கு."
கேள்விகள் நெற்றிச் சுருக்கங்களாய் கணபதிப்பிள்ளையின் முகத்தில் தெரிந்தன.
"என்னட்டை என்னடா தம்பி இருக்கு! வீடு வாசல் நகை நட்டெல்லாம் எரிஞ்சு சாம்பலாய் போச்சு! இந்த நிலைமையிலை எங்கை கடன் வாங்க முடியும் சொல்லு பார்ப்பம்.'
கந்தசாமி நெற்றியைத் தடவிக் கொண்டார். "நீங்க சொல்லுறதும் மெய்தான், அப்படியெண்டால் நீங்க இந்தியாவுக்குப் போனால் என்ன! நிறையப் படகுகள் போகத் தொடங்கியிருக்குது'
கணபதிப்பிள்ளை கந்தசாமியை ஏறிட்டார். தமிழ்நாடு எங்களைப் பாதுகாக்கும் சொந்தச் சகோதரர் மாதிரி ஆதரிக்கும் நல்ல சனங்கள். பிள்ளைகளை அங்கை படிக்க வையுங்க. நிலைமை சரிவாறவரை அங்க இருங்க. புவனேஸ் கூட புதுச் சூழ்நிலையில் கவலையை மறந்திடுவாள்.'
"அப்போ நீர்" விரக்தியோடு சிரித்தார் கந்தசாமி. 'எனக்கு ஆரண அண்ணை இருக்கினை! எல்லாரும் என்னை விட்டிட்டுப் போயிட்டினை நான் காவோலை" இரக்கமாக அவரைப் பாரத்தார் கணபதிப்பிள்ளை.
அவரையறியாமலே கண்கள் கலங்கின. இராமேஸ்வரத்தில் வந்து இறங்கும் வரை கணபதிப்பிள்ளைக்கு நெஞ்ச தடதடவென்று அடித்துக் கொண்டிருந்தது. புவனேஸ்வரியும் சுப்பிரமணியமும் முகம் இறுகிப் போயிருந்தனர். எல்லாம் முடிந்து திரள் திரளாகப் புகையிரத்தில் ஏறினர்.
வழியிலே மயங்கிச் சரிந்த கிழவி ஒருத்தியை சுப்பிரமணியன் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டான். கிழவியின் கை அவனைக் கெட்டியாகப் பற்றியிருந்தது. புகையிரதத்திலிருந்து இறங்கியவர்கள் வரிசை வரிசையாக பேரூந்தில் ஏறினர்.
ஒரு விடிகாலையில் பேரூந்து அவர்களை அந்தப் பரந்த இடத்தில் இறக்கி விட்டது. எல்லாரும் நித்திரைக் கலக்கத்தில் இருந்தனர். குளிர்காற்று முகத்தில் அறைந்தது.
புவனேஸ்வரி சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்கள் களைத்தன. பரபரப்போடு சொன்னாள். ஐயா, அண்ணனைக் காணவில்லையே.'
அந்த அதிகாரியின் முன் பணிவோடு நின்றார் கணபதிப்பிள்ளை. கெஞ்சி மன்றாடினார். கண்கள் கலங்கின. ஐயா ரெண்டு வருசமா நான் என்ரை பிள்ளையைத் தேடுறன். எங்களோடை வந்தவன் தவறிப்போய் விட்டான். எத்தினையோ மனுக் கொடுத்திட்டன், ஒரேயொரு ஆண்பிள்ளை. பெரிய அதிகாரி ஐயாவுக்குக்கூட மனு அனுப்பினன். எங்கையாவது ஒரு அகதி முகாமிலை தான் இருக்கவேணும். எங்களைச் சேர்த்து வச்சிடுங்க ஐயா.'
அதிகாரி சாதாரணமாகச் சொன்னார். லட்சம் பேருக்குக் கிட்ட 'கேம்ப்' பிலை இருக்காங்க. எங்க போய்த் தெடறது! எதுக்கு இப்ப பையனைத் தேடறே-குண்டு வீச்சிலே செத்திட்டதா நினைச்சிக்கோ. விவகாரம் பண்ணாத."
அதிகாரி முகாமின் வாசலில் நின்ற ஜீப்பை நோக்கி நடந்தார். பளீரென்று இடியொன்று இறங்கினாற் போல அதிர்ந்து திகைத்து நடுங்கிப்போய் நின்றார் கணபதிப்பிள்ளை.
இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற இளநிலை அதிகாரி ஒருவர் கண்களில் பரிவு தொனிக்க கணபதிப்பிள்ளையின் அருகே வந்தார்.
"என்ன பேர் சொன்னீங்க'
கணபதிப்பிள்ளை ஏக்கத்தோட அவரைப் பார்த்தார்
'சுப்பிரமணியன். என் பேர் கணபதிப்பிள்ளை."
"வயசு சொல்லுங்க."
"இருபத்தி நாலு வயது ஐயா"
"சிலோன்ல உங்க ஊர்?"
சொன்னார்
இளநிலை அதிகாரி எதையோ யோசித்தார் தயக்கத்துடன் தனது 'பிரீப் கேசில்' இருந்த செய்தித்தாளை எடுத்துப் பார்த்தார். முகத்தில் கவலை படர்ந்தது.
"சொல்லக் கஸ்டமாயிருக்கு. உங்க பையனை சிறப்பு முகாமில நேற்றுத்தான் அடைச்சிருக்கிறாங்க."
"ஐயா"
'ஆமா தான் இருந்த 'கேம்'பை விட்டு 'பர்மிசன்' இல்லாம ஊர் ஊரா உள்ள 'கேம்ப்' எல்லாம் போயிருக்கிறான். அவன் பேர்ல 'கம்ப்ளயிண்ட்' கொடுத்திருக்காங்க. முந்தா நாள் பஸ்ல வாறபோது போலிஸ் காரங்க பிடிச்சிட்டாங்க-அவன் பேர்ல சந்தேகம் இருக்கிறதா சொல்லுங்க."
'ஐயா ஐயா' பதறினார் கணபதிப்பிள்ளை! என் பிள்ளை நல்ல பிள்ளை. எந்த சோலி சுரட்டுக்கும் போகாதவன், எங்களைத்தான் அவன் தேடித் திரிகிறான். சிறப்பு முகாம் என்றால் என்ன மாதிரி ஐயா! என்ரை பிள்ளையை நான் பார்க்கிறதுக்கு உதவி செய்யுங்க. உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்."
இளநிலை அதிகாரி கருணையோடு அவரைப் பார்த்தார். "என்னாலை என்ன செய்ய முடியும்! சிறப்பு முகாம்னு பேச்சுத்தான், ஆனால் அது-வேணாம் நான் சொல்ல வேணாம்."
இளநிலை அதிகாரி அங்கிருந்து புறப்பட்டார். கணபதிப்பிள்ளையின் உடல் திடீரென்று நடுங்கி அதிர்ந்தது. மூட்டுகள் நடுங்கின. தானே குலுங்கினாற் போல நிலத்தில் சரிந்து ஒரு காலையும் கையையும் பரிதாபமாக இழுத்து இழுத்து வேதனையோடு உதறினார், முனகினார். பக்கத்தில் நின்றவர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குச் சென்றனர்.
பாரிச வாதத்தால் படுத்திருந்த கணபதிப்பிள்ளை மகளையே நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.



பெருமூச்சு அனலாய் சீறிற்று.
'பிள்ளை."
"என்ன ஐயா வேணும், தண்ணீர் தரவோ!"
"இல்லை-இஞ்சை ஒருக்கால் வாணை."
போய் அருகே உட்கார்ந்தாள்
'சொல்லுங்க"
பிள்ளை தயங்கினார்
'சொல்லுங்கோ." கனிவோடு அவரைப் பார்த்தாள்.
'எனக்கு மனதிலை ஒரு பெரிய குறை இருக்கு.'
அவள் நெகிழ்வோடு கேட்டாள்.
"என்னய்யா?"
'நான் உங்களை இஞ்சை கூட்டிக்கொண்டு வந்திருக்கக்கூடாது. பெரிய பிழை விட்டிட்டன்."
'ஒரு பிழையுமில்லை இப்ப அதுக்கென்ன! உங்களுக்குச் சுகம் வந்த உடனே அண்ணனையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போயிடுவம்."
அவர் கண்களிலிருந்து பொட்டென்று கண்ணீர் உடைந்து சிதறிற்று.
வார்த்தைகள் அழுகையில் கரைந்து மிதந்தன.
'ராசாத்தி-எனக்கு என்னவோ சொல்லுது. நான் இண்டைக்கோ, நாளைக்கோ போயிடுவன் போல இருக்கு.'
அவள் குறுக்கிட்டாள். உறுதியோடு அவரைப் பார்த்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பில்...

கூறுகின்றன.

சிறீலங்காவின் மேல் மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகத்தில் 6-8-95 இல் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 25 பேர் கொல்லப்பட்டு, 45 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்ததாகவும் அறியப்படுகின்றது. இதனால் கொழும்புப் பகுதியில் பதட்டநிலை தோன்றியுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

# அளவெட்டியில் தரைநகர..

கடும் எதிர்த்தாக்குதலை மேற் கொண்டனர். இத் தாக்குதலில் பலத்த இழப்புக்களைச் சந்தித்த இராணுவம் பின்வாங்கியுள்ளதாக தளச்செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளையில் இவ்இழப்புக்களைச் சகிக்க முடியாத சிறீலங்கா, இராணுவம் 50 புலிகளை அழித்துவிட்டதாக வெறும் அப்பட்டமான பொய்யினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

# துரோகிகள்..

ப்படுகிறது. 5 முகாம்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய சேதம், சில முகாம்களை திரும்பவும் செயற்படமுடியாத வாறு முற்றாக சீர்குலைத்துள்ள தாகவும் அறியவருகிறது.

மணலாற்றில் சிறீலங்கா அரசால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த இப்பாரிய 5 இராணுவ முகாம்கள், விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டபோது, வீரச்சாவடைந்த போராளிகள் 180 பேர்கள் என விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசு 200, 300 புலிகள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதாகப் பொய் பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்தபோதிலும், வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகள் 180 என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் குறித்து முன்னரேயே தமிழினத் தேசத்துரோகிகள் சிறீலங்கா இராணுவத்துக்குக் கொடுத்த தகவலின் பேரில் சிறீலங்கா இராணுவம் இரகசியமாகப் படைகளையும், ஆயுதங்களையும் குவித்துத் தயார் நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு ஏராளமான பீரங்கி நிலைகளையும், காவல் அரண்களையும் தகர்த்து எறிந்துள்ளனர். இத்தாக்குதல் திட்டத்தை முன்னரேயே இராணுவம் அறிந்து பாதுகாப்பான நிலைகளில் இருந்தவாறு தாக்குதல்களை நடத்தியதால் ஏராளமான இழப்புக்களை விடுதலைப் புலிகள் சந்திக்க நேர்ந்தது. இதன் விளைவாக 5 இராணுவ முகாம்களையும் விட்டு வெளியேற நேர்ந்தது. ஏற்கனவே இராணுவத்தால் நன்கு திட்டமிடப்பட்ட கொலைவலயத்தினுள் விடுதலைப் புலிகளின் மகளிர் அணி சிக்குண்டதால் மகளிர் அணி பெரும் இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. 128 பெண் போராளிகளும், 52 ஆண் போராளிகளும் இத்தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளனர். தமிழீழத்தின் இதயபூமியான இப்பிரதேசத்தை மீட்டெடுக்கும் புனிதப்பணியில் வீரச்சாவடைந்த விடுதலை வீரர்களின் வீரச்சாவை தமிழீழ தேசம் சோகத்துடன் தாங்கிக் கொண்டது. சமூகத்தின் கோடரிக்காம்புகளான இத்தேசத்துரோகிகளின் இவ் பச்சைத் துரோகத்தனத்தால், இவ்இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. தமிழீழ தேசமெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு தோரணங்கள் கட்டப்பட்டு சோககீதங்கள் இசைக்கப்பட்டு மணலாற்று வீரர்களுக்கு தமிழீழ தேசம் தனது வீரவணக்கத்தைச் செலுத்தியது. எமது அனைவரினதும் சுதந்திரத்திற்கும் நல்வாழ்வுக்குமாய் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து இதயபூமியில் விதையாகிய மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

# சமாதானத்தை விரும்பிய....

மரணமடைந்த 120க்கும் மேற்பட்ட மக்கள் பற்றிய செய்தியை, சர்வதேச சமூகத்திற்கு வெளியிட்டவர்களுள் ஒருவர். இதனால் ஆத்திரமடைந்த சிறீலங்கா இவரைச் சிறைப்படுத்தி, போலிக் குற்றச்சாட்டினை சுமத்தி நாடு கடத்தியது.

இவரது நாடுகடத்தல் மூலம் சிறீலங்கா மறைமுகமாக சமாதானத்திற்காகப் பாடுபடும், உண்மைகளைக் கூறும் அனைத்து வெளிநாட்டவருக்கும் பயமுறுத்தல் விடுத்துள்ளதாகச் சர்வதேச அவதானிகள் கருதுகின்றனர்.

# படையெடுப்பு அபாயம்....

எதிரிப் படையைத் தடுத்து நிறுத்தி, பின்வாங்கி ஓட ச்செய்யவல்ல



சக்தி எமது இளை ஞர்களுக்கும், யுவதிகளுக்கும் உண்டு.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து எமது இனத்தைப் பாதுகாப்பதா! அல்லது அசண்டையீனமாக இருந்து எமது மக்களை அழிய விடுவதா! என்று முடிவெடுக்கவேண்டிய தருணம் எமது இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளது. போருக்கு முகங்கொடுக்காது, வீணே சும்மா இருந்தால் நாமும் அழிந்து எமது குடும்பத்தையும் உறவுகளையும் இழந்து விடுவோம். போருக்கு முகம் கொடுத்தால் எதிரியை அழித்து, அவனை எமது மண்ணிலிருந்து விரட்டி எமது மக்களைப் பதுகாக்க முடியும். ஆகவே புலிகள் இயக்கத்தில் இணைந்து -ஆயுதப் பயிற்சி பெற்று, எதிரிப்படைகளை விரட்டி அடிக்க எமது இளைஞர்களும் -யுவதிகளும் உடனடியாகவே முன்வரவேண்டும் என அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம்.

***"தமிழர்படையின் ஆட்பலம் தான், தமிழர் தேசத்தைப் பாதுகாக்க வல்லது"***

# துரத்தப்பட்ட அரசியற்தீர்வு

இனப்பிரச்சனைக்கு சமாதான ரீதியில் தீர்வு இல்லை என்பதை யாழ் குடாநாட்டில் மிகப்பெரும் படை எடுப்பை நடத்துவதன் மூலம் சிறிலங்கா அரச உறிதி செய்துள்ளது சிறிலங்கா அரசின் திட்டத்தின்படி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது இல்லை இராணுவத்தீர்வு என்பதே சிறந்த வழி என்பதே இவ் இராணுவ நடவடிக்கை மூலம் அரச வெளிப்படுத்தும் விடயமாகும் ஆனால் சிலசமயம் இராணுவத்தீர்வு என்பது சாத்தியமாதவிடத்து புலிகளை பலவீனப்படுத்திவிட்டு அதாவது இராணுவ மேலாதிக்க நிலையில் இனப்பிரரசினைக்க பேச்சக்கள் மூலம் தீர்வு கான்பது யோசனையாக இருக்கலாம்.

அ

இவ்விரண்டு கருத்துக்களையும் சிறிலங்கா அரசாங் கத்தரப்பினரும் இராணுவத்தரப்பினரும் மாறி மாறிக் கூறிவருகின்றனர் இறுதியாக யாழ் குடாநாட்டில் இராணுவநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபின்னர் இராணுவ த்தளபதி சில்வா இரண்டாவது கருத்தை வலியுறுத்தி யிருந்தார்.

ஆனால் இது இராணுவத்தளபதியின் தனிப்பட்டகரு த்தாகக்கூட இருக்கலாம். ஏனெனில் இராணுவத்தளபதியின் தற்போதைய திட்டத்தை அரசாங்கத்தரப்பினர் பின்னர் நிராகரிக்கலாம். சிலசமயம்தனது கருத்தையே அவர் மாற்றியும கொள்ளலாம்.

ஆனால் இதில் அரசாங்கத்தினதும் இராணுவத்தினரின் கருத்தும் எதுவாக இருப்பினும் யாழ் குடாநாட்டின் தாக்குதலின்பின் இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு சாத்தியமாகப்போவதில்லை என்பபதே நிதர்சனமாகும் அதாவது இப் படை எடுப்பு வெற்றியில் முடிந்தாலும்சரி தோல்வியில் முடிந்தாலும் சரி சமாதானத்தீர்வு என்பது சாத்தியமாகப்போதில்லை என்பதை இது முடிவாக்கியு ள்ளது என்பதே நிச்சயமாகும்.

ஏனெனில் யாழ் குடாநாட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ள ப்பட்டாலோ அன்றி இராணுவ நடவடிக்கையீல் அப்பாவிப் பொதுமக்கள் பெரியளவில் கொல்லப்பட்டாலோ இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு என்பது சாத்தியமாகப் போவதில்லை என்பதை விடுதலைப்புலிகல் தெளிவாக முன்னரே அறிவித்திருந்தனர்

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அதனைப் பொறுப்படுத்த வில்லை கடந்த மூன்றுதினங்கள் மட்டிலுமே 213 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படும் அளவிற்கு இனப்படு கொலையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

பல இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்துள்ளனர் ஏறத்தாழ குடாநாட்டின் சனத்தொகையில் அரைப்பங்கினர் இடம்பெயர்துள்ளனர் எனலாம்.

அடுத்ததாக இராணுவரீதியில் தமது கைமேலோங்கிய நிலையில் விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக்கு கொண்டுவருதல் என்பதும் அரசாங்கத்தின் தவறானதொறு மதிப்பீடாகவே இருக்கும். ஏனெனில் விடுதலைபப்புலிகள் பலம், பலவீனம் என்பதை வைத்து அரசியற் பேச்சுக்களை நடத்துவதற்கு என்றுமே தயாராக இருந்ததில்லை. அத்தோடு தமிழ் மக்களின் உரிமைகளை தமது லாபத்திற்காக அவர்கள் பேரம் பேசவும் தயாராக இருக்கவில்லை தமிழ் மக்களின் பாதுகாப்பு சயநிர்ணயம் என்பவற்றின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்த அவர்கள் தயாராக இருந்தனர்.

இதனை விடுதலைப்புலிகளின் கடந்தகால வரலாறுகளே எடுத்துக்காட்டுவதாக உள்ளது இதற்கு இந்திய இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் நடந்து கொண்ட விதம் சிறப்பான ஊதாரணமாகும்.

இந்த நிலையல் யாழ்குடாநாட்டடின் மீதான தாக்குதல்களுக்குப் பிறகு இனப்பிரச்சனைக்கு சிறிலங்கா அரச விரும்பினால் என்ன விரும்பாது விட்டால் என்ன அரசியற் தீர்வு என்பது சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை என்பதே எதிர்கால யதார்த்தமாய் இருக்கும் எனத் துன்ந்து கூறமுடியும்.

ஆனால் இதற்கான முழுப்பொறுப்பும், இதனால் எதிர்காலத்தில் இட்ம்பெறப்போகுமி நிகழ்வுகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கமே பொறுப்பாகும். இதனைச் சந்திரிகா அரசு மட்டுமல்ல சந்திரிகா அரசிற்கு உதவுபவர்களும் புரிந்துகொள்ள வேண்டும் இன்று அப்பாவி தமிழ் மக்கள் ஈவிரக்கமற்ற முறையில் கோரமாகப் படுகொலை செய்யப்படுவதை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பின்னர் ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசுவதில் பயன் எதுவும் இருக்கப்போவதில்லை, ஏனெனில் சிறிலங்கா அரசு தற்பொழுது புரியும் இனப்படுகொலைக்கு உதவுபவர்கள் பின்னர் எவ்வாறு ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் பேசுவதற்கு தகுதி உடையவர்களாக இருக்க முடியும்.

# மட்டக்களப்பு...

தெரிவிக்கின்றன. இத்தாக்குதலானது இவ் அதிகாரியைக் குறிவைத்து நடத்தப்பட்டதாகச் சிறீலங்கா அரச அறிவித்துள்ளது.

1992ஆம் ஆண்டு கடற்படைத் தளபதி கொமடோர் கிளான்சி பெர்னாண்டோ, கொழும்பில் வெடி விபத்தில் கொல்லப்பட்டதன் பின், கொல்லப்பட்ட மிக உயர்பதவி வகித்த இராணுவ அதிகாரியென இவர் வர்ணிக்கப்பட்டுள்ளார். இவரின் மரணம், சிறீலங்காவின் இராணுவ, அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பிலுள்ள இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடும் தலைமைப் பணியகத்தில், உயர்தர பதவியில் இருந்த இவர், இராணுவத்தில் இரண்டாம் இடத்தில் இருந்த மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டப் பொறுப்பதிகாரியாகவிருந்து ஓய்வு பெற்ற பின்னர், இரண்டு ஆண்டுகளுக்கு மட்டு-அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

50 வயதான நளின் அங்கமன சிறந்த தந்திரோபாயவாதி என்றும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மறைமுகமான காரண-கர்த்தாவாக இருந்த அதேவேளை, கரந்தடித் தாக்குதலுக்கான எதிர்ப்பு நடவடிக்கையில், முக்கிய தந்திரமாகிய உள்ளூர் மக்களை ஏமாற்றித் 'தன்வசப்படுத்துதல்' என்ற விடயத்தில் மிகவும் கெட்டித்தனமாகவும் செயற்பட்டார் என்றும் கூறப்படுகின்றது. கிழக்குப் பகுதியின் குடிசார் நிர்வாகியாகவும், இராணுவ, குடிசார் ஒருங்கிணைப்பாளராகவும், இராணுவப் பேச்சாளராகவும் பதவி வகித்துள்ளார். இவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற இருந்தார் என்றும் இவரின் இழப்பு இராணுவ தலைமைப்பீடத்தில் பெரும் வெற்றிடத்தை தோற்றுவித்து விட்டதாகவும் கருதப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குமார் பொன்னம்பலம் இலண்டனில்....

நிலையிலே எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அந்தப் போரை முடுக்கிவிட்டிருக்கின்ற சூழ்நிலை இன்று காணப்படுகின்றது!

பதில்- ஓம்மோம். இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற கவலையான விசயம் என்னவென்றால், நேர்மையற்ற இந்த அரசாங்கத்திற்கு உறுதுணையாக எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் இருக்கின்றார்கள் என்பதுதான் மிகவும் கவலைக்குரிய விசயம். நாங்கள், எங்களை மதிக்க முடியாமல் இருந்தால், எப்படி வேறொரு சாரார் எங்களை மதிக்கப் போகிறார்கள்! விளங்குதே! நாங்கள் எங்களை மதிக்காமல் அரசாங்கத்தினுடைய நடமாட்டத்திற்கெல்லாம் தாளம் போட்டுக் கொண்டிருந்தால், எங்களுடைய தலையிலே அவர்கள் அடிப்பீர்கள்தானே!

ஒருசில நாட்கள் இந்த அரசாங்கத்தினுடைய கெடுபிடிகளுக்கு எங்களுடைய தரப்பில் இருந்து ஒன்றும் நடக்கவில்லை என்று கவலைப்பட்டனான். ஆனாலும், இப்ப ஒரு நாலைந்து நாட்களாக அவர்களை, எதிர்நோக்கும் பாரிய விளைவுகளைக் கொடுத்துக் கொண்டு வாறார்கள், தமிழர் சார்பிலே போர் தொடுக்கும் அந்த இயக்கம். அதைப்பற்றி **நான் சந்தோசம் கூறாமல் இருக்க முடியாது.**

கேள்வி- நல்லது. உங்கள் நம்பிக்கையில் அடுத்த கட்டங்கள் எப்படி இருக்குமென்று அனுமானிக்கின்றீர்கள்!

பதில்- அடுத்த கட்டமென்ன! நானும் ஒருசில நாட்கள் இந்த அரசாங்கத்தினுடைய கெடுபிடிகளுக்கு எங்களுடைய தரப்பில் இருந்து ஒன்றும் நடக்கவில்லை என்று கவலைப்பட்டனான். ஆனாலும், இப்ப ஒரு நாலைந்து நாட்களாக அவர்களை, எதிர்நோக்கும் பாரிய விளைவுகளைக் கொடுத்துக் கொண்டு வாறார்கள், தமிழர் சார்பிலே போர் தொடுக்கும் அந்த இயக்கம். அதைப்பற்றி **நான் சந்தோசம் கூறாமல் இருக்க முடியாது.**

கேள்வி- நல்லது. இதையும் குறித்துத்தான் அந்தக் கேள்வியைத் தொடுத்தேன். இந்த அடிப்படையிலே நீங்கள் எதிர்பார்க்கின்ற அரசை உணர வைக்கக்கூடிய நிலைகள் அங்கு உருவாகும் என்ற நம்பிக்கை அங்கே இருக்கின்றதா என்பதைத்தான் நான்—

பதில்- அதைபற்றித் தெரியாது பாருங்கோ. இந்த அரசாங்கம் தமிழர் சார்பிலே சாதகமாக எதுவும் உணரப் போவதாக எனக்கு நம்பிக்கையில்லை. அப்படியாகத்தான் அவர்கள் உணரப் போவது என்று சொன்னால், அவர்கள் வேடிக்கையாகச் சொல்லமாட்டார்கள், இப்படிப் போர் நடந்து கொண்டிருக்கும் பொழுது, தங்களுடைய ஆலோசனைகள் கருத்துக்களை சனிக்கிழமை வெளியிடுவதென்று. இப்படியான ஒரு சூழ்நிலையிலே ஆலோசனைகளை வெளியிட்டுத்தான் என்ன பிரயோசனம்! ஆலோசனைகளை எப்போதோ வெளியிட்டிருக்க வேண்டும்.

கேள்வி:- நல்லது. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து அடுத்த கட்டத்தை எப்படிப் பார்க்கலாம் என்பதைத்தான், உங்கள் அனுபவத்திலிருந்து கேட்க ஆசைப்பட்டேன்?

**பதில் — இந்தப் போர் நடந்து கொண்டிருக்கும்போது எனக்கோ நம்பிக்கையில்லை, பேச்சுவார்த்தைகள் இனிமேலும் நடக்குமென்று. ஆகையால் இந்தப் போர் இப்படிப்போய் யார் வெல்லுவார்கள் என்று பார்க்க வேண்டும். அப்படித்தான் அரசாங்கம் வென்றால், ஒரு தமிழ்த் தேசிய இனம் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. முக்கியமாகக் கொழும்பிலே சில விளைவுகள் நேரலாம். ஆனாலும் இவ்வளவு காலமாக இந்த அரசாங்கத்தினுடைய கெடுபிடிகளை எதிர்நோக்கும் புலிகள் இயக்கம். இன்னமும் பல வருடங்களுக்கு அல்லது எதிர்வரும் நாட்களுக்கு எதிர்நோக்கி, இந்த அரசாங்கத்தை ஒருவாறு தோல்வியடையச் செய்ய முடியுமென்றால், நான் நினைக்கிறேன் மிக விரைவிலே ஒரு தனிநாடு வந்து சேருமென்று.**

கேள்வி- நல்லது. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து அடுத்த கட்டத்தை எப்படிப் பார்க்கலாம் என்பதைத்தான், உங்கள் அனுபவத்திலிருந்து கேட்க ஆசைப்பட்டேன்!

பதில்- இந்தப் போர் நடந்து கொண்டிருக்கும்போது எனக்கோ நம்பிக்கையில்லை, பேச்சுவார்த்தைகள் இனிமேலும் நடக்குமென்று. ஆகையால் இந்தப் போர் இப்படிப்போய் யார் வெல்லுவார்கள் என்று பார்க்க வேண்டும். அப்படித்தான் அரசாங்கம் வென்றால், ஒரு தமிழ்த் தேசிய இனம் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. முக்கியமாகக் கொழும்பிலே சில விளைவுகள் நேரலாம். ஆனாலும் இவ்வளவு காலமாக இந்த அரசாங்கத்தினுடைய கெடுபிடிகளை எதிர்நோக்கும் புலிகள் இயக்கம், இன்னமும் பல வருடங்களுக்கு அல்லது எதிர்வரும் நாட்களுக்கு எதிர்நோக்கி, இந்த அரசாங்கத்தை ஒருவாறு தோல்வியடையச் செய்ய முடியுமென்றால், நான் நினைக்கிறேன் மிக விரைவிலே ஒரு தனிநாடு வந்து சேருமென்று.

கேள்வி- நல்லது. இந்த அடிப்படையிலே அடுத்த என்னுடைய கேள்வி, இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினை அடிப்படையிலே, அண்மைய நாட்களில் நாங்கள் கேள்விப்பட்ட அளவில் மூர்க்கத்தனமாக சிறீலங்கா அரசாங்கம் குண்டுகளை வீசி தமிழ் மக்களுடைய பொதுமக்களுடைய இலக்குகளைக்கூட அழித்திருக்கின்றது. இந்த நிலைப்பாடு, நீங்கள் எதிர்பார்த்தவாறு அந்த மோதல்கள் தொடர்கின்ற நிலையிலே எப்படிப்பட்ட ஒரு எதிர்ப்புணர்வின் மூலம் இந்த அரசாங்கத்தை இந்தக் கட்டுமானமற்ற இலக்குத் தாக்குதலை நிறுத்தலாம் என்று இந்த நேரத்திலே நீங்கள் கூறக்கூடியதாகவிருக்கும்!

பதில்- தமிழ் மக்கள் ஒற்றுமையாக, தமிழ்மக்களுடைய எதிர்ப்பை இந்த அரசிற்குக் காட்ட வேண்டும். அந்த எதிர்ப்பை மூன்று விதத்திலே காட்டலாம் என்று நான் நினைக்கிறேன், இந்தக் கட்டத்திலே, முதலாவதாக, நாங்கள் இந்த அரசாங்கம் உடனடியாக தங்களுடைய ஆலோசனைகளை முன்வைக்க வேண்டுமென்று கேட்கலாம். ஆனாலும் இந்தக் கட்டத்திலே அதைக் கேட்க முடியாது. ஏனென்றால் ஓர் போர் நடந்து கொண்டிருக்கின்றபடியால், ஆகையால் அடுத்தபடியாக, நாங்கள் எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகளை- அரசாங்கத்தின்ரை காலடியில் நக்கவைத்துக் கொண்டிருக்கின்ற எங்களுடைய தமிழ்ப் பிரதிநிதிகளை உடனடியாகத் தங்களுடைய ஆதரவை அரசாங்கத்திடமிருந்து வாபஸ் பெற்று, அரசாங்கத்தினுடைய எந்தவொரு நடவடிக்கையினையும் பாராளுமன்றத்தில் கண்டித்து அவர்களுக்கு எதிராக வாக்களிக்க முன்வர வேண்டும்.

அடுத்ததாக, நான் நினைக்கிறேன் இந்தக் கட்டத்திலே தமிழர்கள் ஒற்றுமையாகச் சரியோ, பிழையோ எங்களுக்காகக் குரல்கொடுத்தோ, செயற்பாட்டிலை ஈடுபட்டிருக்கின்ற அந்த இயக்கத்தை நாங்கள் ஆதரிக்க வேணும் இந்தக் கட்டத்திலே என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். அல்லாட்டில் என்ன சொல்வார்கள் என்றால், மக்கள் இவர்களுடன் இல்லை- இவர்களை மட்டம் தட்டிவிட்டால் எல்லாம் சரியாகும் என்று அவர்கள் செய்யலாம். அவர்களுடைய நோக்கம் என்னவென்றால், புலிகள் இயக்கத்தை மட்டம் தட்டிவிட்டால் ஏதேனும் ஒரு அரசியல் தீர்வை நடைமுறைக்கு அதாவது IMPLEMENT பண்ண முடியுமென்ற அந்த ஒரு நம்பிக்கை இருக்கு. அப்படியான ஒரு நிலையை நான் எதிர்ப்பேன். ஆனால் ஒருசில தமிழர்கள் சொல்வார்கள், ஓம் சரிதான். அப்படித்தான் நடக்க வேண்டுமென்று. அதாவது அப்படியான தமிழர்களுடைய நிலைப்பாடு என்னவென்றால், எங்களைத் தட்டிவிட்டுப்போட்டு நீங்கள் கொடுக்கிறதைக் கொடுங்கோ, நாங்கள் எடுத்துக்கொண்டு போறோமென்று. இப்படியான ஒரு கேவலமான மனப்பான்மை எங்களின் மத்தியிலே இருக்கக்கூடாது. இவ்வளவு போருக்குப் பிறகு இந்த அரசாங்கம் ஏதேனும் கொடுக்கிறதிற்கு முன்வந்தால், அதை நாங்கள் நிராகரிக்க வேண்டும் இந்நிலையில் என்று, நான் சொல்லுவேன். ஏனென்றால் நாங்கள் முதலில், எங்களை மதிக்க வேண்டும். எங்களை நாங்கள் மதித்தால்தான் மற்றவன் பயப்படுவான்.

கேள்வி- அப்படியானால் சுருக்கமாகக் கூறினால் இறுதித் தீர்வு என்பதை ஒரு தனியரசாக நிர்வகிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுப்பீர்களா! அல்லது ஒரு சமஸ்டி முறையில்... எப்படி உங்களுடைய எண்ணம் இருக்கிறது!

பதில்-இப்படிப் போர் நடந்து கொண்டு போனால், தனிநாடு வந்து முடியும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. சமஸ்டி முறை என்பது, ஏற்கனவே நாங்கள் கதைத்துத் தீர்மானித்திருக்கலாம். அதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றது. ஆனாலும் அவர்களும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்களும் அரசாங்கத்தை வற்புறுத்தவில்லை. ஏன் நாங்கள் வற்புறுத்தத் தொடங்கினால், எங்களுக்குச் சாப்பாடு, வசதிகள், அதுகள் இதுகள் எல்லாம் இல்லாமற்போய் விடும். ஆகையால் நாங்கள் அப்படி வற்புறுத்தவில்லை. இனிமேல் கதைத்துப் பிரயோசனமில்லை. இன்றைக்குப் பத்திரிகைகளில் பார்த்தால், எங்களுடைய தமிழ்க்குழுக்கள் யோசிக்கினமாம், அரசாங்கத்திற்குத் தாங்கள் கொடுத்துவந்த ஆதரவைத் தாங்கள் வாபஸ் பெறவோ! என்று யோசிக்கினமாம். இந்தக் கட்டத்திலும் யோசனையிலேதான் இருக்கினம். ஆகையால் இப்படி நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பெற முடியாது.

கேள்வி- காலம் கடந்த ஞானம் என்று குறிப்பிடுகின்றீர்கள். சரி இறுதியாக—

பதில்-எந்தவொரு காலகட்டத்திலும் அவர்களுக்கு ஞானம் இல்லை என்றுதான் நான் சொல்லவேண்டும்.

கேள்வி-இறுதியாக, கொழும்பிலே இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கமான நிலைமைக்கு நீங்கள் நிச்சயமாக முகம் கொடுத்திருப்பீர்கள். அங்கு நடைபெற்றிருக்கின்ற அந்த நிகழ்வுகளுடைய எதிர்த்தாக்கம், அங்கு புலம் பெயர்ந்திருக்கின்ற தமிழர்களை எப்படிப் பாதிக்கின்றது! அல்லது பாதுகாப்பு எப்படி இருக்கின்றது என்பதை அறிய ஆசைப்படுகின்றேன்!

பதில்- மிகவும் பெரிய விதத்திலே தமிழ் மக்களைப் பாதிக்கின்றது. ஆனாலும் நாங்கள் என்னதான் செய்யமுடியும். சில அதிமுக்கியமான விசயங்கள் நடந்து, அதை நாங்கள் அம்பலப்படுத்த வெளிக்கிட்டாலும் எங்களுடைய சாரார் அதாவது எங்களுடைய தமிழ்ப் பத்திரிகைகள் அல்லாவிட்டால் எங்களுக்குச் சார்பாக இருக்கின்ற ஆங்கிலப் பத்திரிகைகள் அப்படியான நிகழ்வுகளைப் பத்திரிகைகளில் போடமாட்டார்கள். பத்திரிகைகளில் போடாமல், அந்நியநாடுகள் எப்படி அறியக்கூடும்! எங்களுடைய சாரார், எங்களுடைய நிலையை உணர்ந்து, இந்தப் பாரிய போரிலே தங்களுடைய பங்களிப்பைக் கொடுக்க வேண்டும்.

கேள்வி-கொழும்பில் உள்ள சாதாரண மக்களுடைய பாதுகாப்புப் பற்றித்தான் நான் சுருக்கமாகக் கேட்டேன்!

பதில்-பாதுகாப்புச் சம்பந்தமாகப் பொதுமக்கள் நடமாட முடியாது. அவர்கள் இழுத்துக் கொண்டு போகிறார்கள். சொல்லுகின்றார்கள், அந்த HUMAN TASK FORCE அப்படி இப்படி என்று. ஆனாலும் அவர்களுக்கு ஒருசில விதத்தில்தான் உதவி செய்யமுடியும். ஏராளமான மக்களை இழுத்துக் கொண்டு போகின்றபோது, அதைச் சமாளிக்கிறதுக்கு முடியாத ஒரு நிலை. சில நண்பர்களுக்குச் செய்ய வேண்டிய சில விசயங்களைச் செய்யமுடியாத ஒரு நிலையில், அடுத்த கட்டத்திற்குப் போகின்றார்கள். ஆகையால் எவ்வளவோ அவலநிலை இருக்கின்றது. அதைச் சமாளிக்க முடியாமல் இருக்கிறது. இது சமாளிக்கிறதென்றால் இரண்டு விதத்தில் குறிப்பிடலாம். சில ஆட்கள் உதவி செய்யலாம். அரசியலில் ஈடுபட்டுள்ள சில ஆட்கள் இப்படிப்பட்ட விசயங்களை அம்பலப்படுத்திக் கண்டிக்கலாம். அதுவும் செய்கிறார்களில்லை.

இன்றைக்குப் பத்திரிகைகளில் பார்த்தால், எங்களுடைய தமிழ்க்குழுக்கள் யோசிக்கினமாம். அரசாங்கத்திற்குத் தாங்கள் கொடுத்துவந்த ஆதரவைத் தாங்கள் வாபஸ் பெறவோ? என்று.... யோசிக்கினமாம். இந்தக் கட்டத்திலும் யோசனையிலேதான் இருக்கினம். ஆகையால் இப்படி நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பெற முடியாது.
கேள்வி — காலம் கடந்த ஞானம் என்று குறிப்பிடுகின்றீர்கள். சரி இறுதியாக......
பதில் —எந்தவொரு காலகட்டத்திலும் அவர்களுக்கு ஞானம் இல்லை என்றுதான் நான் சொல்லவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இந்தியாவின் அழுத்தமும் தலைவரின் உடையாத உறுதியும்

'அதற்காக நான் இங்கேயும் சாகத்தயார். அங்கேயும் சாகத்தயார். நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்.'

உறுதிமிகுந்த இந்த வார்த்தைகளை டிக்சிற் எதிர்பார்க்கவில்லைப் போலும்! அதேவேளை, தனது மிரட்டல் தலைவர் பிரபாகரனிடம் எடுபடவில்லை என்ற நமைச்சலும் ஒன்றுசேர, குரலைத் தாழ்த்தியபடி, எச்சரிப்பதுபோல் டிக்சிற் சொன்னார்.

'நாங்கள் பெரிய வல்லரசு. நீங்கள் ஒரு சிறிய ஆயுதக்குழு. யோசித்துக் கதைக்க வேண்டும். வீணாக அழிந்து போகநேரிடும்.'

அப்போது தலைவர் டிக்சிற்றை நோக்கி,

'பலம், பலவீனம் என்பது பிரச்சினையில்லை. கொள்கைதான் எங்களுக்கு முக்கியம். நாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கிறோம். அவ்வளவுதான்' என்றுவிட்டு, எதையும் எதிர்கொள்ளும் உறுதியுடன்' தலைவர் அமைதியாக இருந்தார்.

தான் கொண்டுவந்த அனைத்து ஆயுதங்களையும் பிரயோகித்துவிட்டு, டிக்சிற் அவர்கள் இப்போது வெறும் கையுடன் நின்றார். அவர் பயன்படுத்திய எந்தவொரு ஆயுதமும், தலைவர் பிரபாகரனைத் தாக்கி நிலத்தில் வீழ்த்தவில்லை என்பதை அறிந்து மனம் புழுங்கியபடி இருந்த டிக்சிற் அவர்கள், அன்ரன் பாலசிங்கத்தைப் பார்த்து, '

'கலந்தாலோசித்து முடிவெடுங்கள்' என்று எச்சரிக்கும் தொனியில் கூறிவிட்டு, தன் குழுவினருடன் வெளியேறினார்.

அதைத் தொடர்ந்து வந்த இரண்டு நாட்களிலும், இந்திய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் 'றோ' அதிகாரிகள், 'ஐபி' எனப்படும் உள்ளூர் புலனாய்வு அதிகாரிகள் என்று பலரும் தலைவரிடம் வந்து, ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்லி எச்சரிக்கை செய்தும், ஆசை காட்டியும் பார்த்தார்கள் எதுவும் சரிவரவில்லை.

இந்த நிலையில், வேறொரு துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி தலைவரது உறுதிப்பாட்டைக் குலைக்க, இந்திய அதிகாரிகள் திட்டமிட்டனர்.

> தலைவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு, தனது கரகரத்த குரலை சரிப்படுத்துவதற்காக ஒருமுறை செருமிவிட்டு, எம்.ஜி.ஆர். சொன்னார்..." நீ எந்த முடிவை எடுக்கின்றாயோ அதைத்தான் நான் ஆதரிப்பேன்" என
> நறுக்காகக் கூறிவிட்டு, தனது இருக்கையை விட்டு எழுந்த அந்தப் பெரும் மனிதர், உற்சாகமாக வெளியே சென்றார்.

அதாவது, தலைவருக்கும் அப்போது தமிழ்நாட்டில் முதலமைச்சர் பதவி வகித்த எம்ஜிஆருக்கும் இடையில் இருந்த நட்பைப் பயன்படுத்தி, அதைச் சாதிக்க முயன்றனர்.

எம்ஜிஆரை டெல்லிக்கு அழைத்த டிக்சிற், அவரையும் கூட்டிக்கொண்டு 'அசோகா' விடுதிக்குச் சென்று தலைவரைச் சந்தித்தார்.

தலைவர் பிரபாகரனுக்கு முன்னால் வைத்து, எம்ஜிஆருக்கு டிக்சிற் நிலமையை விளங்கப்படுத்தி, ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி, தலைவருக்கு அறிவுரை சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, 'ஏன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது!' என்பதை, டிக்சிற்றின் முன்னிலையிலேயே, தலைவர் எம்ஜிஆருக்கு விளங்கப்படுத்தினார்.

இரு பகுதியினரதும் விளக்கங்களைச் செவிமடுத்த எம்ஜிஆர், சிறிது நேரம் சிந்தித்தபடி இருந்துவிட்டு, டிக்சிற்றிடம் கூறினார்.

'நான் பிரபாகரனுடன் தனிமையில் கதைக்க விரும்புகிறேன்.'

அதற்கு உடன்பட்ட டிக்சிற், எழுந்து வெளியே நடக்கத் தொடங்கினார். டிக்சிற் வெளியே போவதைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு கண்களை விட்டு மறைந்ததும், தலைவர் பிரபாகரனை நோக்கி எம்ஜிஆர். திரும்பினார்.

'எம்ஜிஆர். என்ன சொல்லப்போகின்றாரோ! இந்திய அரசுக்குச் சார்பாகக் கதைத்தபடி, ஒப்பந்தத்தை ஏற்கச் சொல்லி வற்புறுத்தப் போகின்றாரோ! அதை மறுதலித்து, எனது மக்களின் நலன்தான் எனக்கு முக்கியமென வலியுறுத்திச் சொல்லும்போது, எமக்கிடையில் உள்ள நட்பு விரிசல் அடையுமோ!' என, தனக்குள் பலவாறாகச் சிந்தித்தபடி தலைவர் காத்திருந்தார்.

தலைவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு, தனது கரகரத்த குரலை சரிப்படுத்துவதற்காக ஒருமுறை செருமிவிட்டு, எம்ஜிஆர். சொன்னார்.

'நீ எந்த முடிவை எடுக்கின்றாயோ, அதைத்தான் நான் ஆதரிப்பேன்'என

நறுக்காகக் கூறிவிட்டு, தனது இருக்கையை விட்டு எழுந்த அந்தப் பெரும் மனிதர், உற்சாகமாக வெளியே சென்றார்.

எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததால் இறுதியில், தலைவர் பிரபாகரனைத் தானே நேரில் சந்திப்பதென, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தீர்மானித்தார்.

# ''வெட்டிரும்புச் சுப்பர்'' விழாவில் இன்று பட்டிமன்றம்

"கொத்திவயல் அம்மன்" கொடியேறி
இன்று பத்தாம் திருவிழா-
பகலிரவு இருபொழுதும்
"வெட்டிரும்புச் சுப்பர்" விழா உபயம்.
இரவுக்கு
"பட்டிமன்றம்" என்று பத்திரிகை விளம்பரம்.
"நரைவிழுந்தால்.... இருவரிலே யாரழகு?
திரைகடலைத் தாண்டிய சீதையா?
அல்லது
கரையாத கற்புடையாள் கண்ணகியா?"
இது தலைப்பு.
"நாவரசர் நல்லதம்பி" நடுவர்
ஒருபக்கம்
"காப்பியத் திலகம் கனகசபை"
தலைமையிலும்
மறுபக்கம்
"வாக்கிய கலாநிதி வடிவேலர்" தலைமையிலும்
பேசிடுவர்.
சீதையணிக்கு மூன்று பேர் வாதிடுவர்.
கண்ணகிக்காய்
வாதிடவும் மூவர் வருகின்றார்.
பிறகென்ன
'அறிவுத் திலகங்கள்' அனல்மூட்ட
செந்தமிழ்த் தீ
பொறிபறந்து அந்தப் புழுதிவயல் தீப்பிடிக்கும்
சீதைக்கு என்ன நிறச் சேலை அழகென்றும்
வாதிடுவர்.
கண்ணகியின் காற்சிலம்பு செய்தகடைப்
பேரதையும் சொல்லிப் பேசிடுவர்.
பகிடியெல்லாம் விடுவர் நடுவர்.
விடியும்வரை கேட்டாலும்
அலுக்காது.
அப்படியோர் "அறிவுக்கடல்" அமிர்தம்?
வசந்த மண்டபத்து வாசலிலே
"வடிவழகி'
இருந்தபடிகேட்டு இன்புறுவாள்,
வீதியெல்லாம்
குவிந்து ஊர்ச்சனங்கள் குதூகலிப்பர்
செந்தில்-கவுண்டமணி திரைப்படத்தைப்
போலயிது
சந்தோசமான சமாச்சாரம்.
இம்மண்ணில்
போர் நடந்தாலென்ன? 'புலி'யிறந்தால்
நமக்கென்ன?
வேரறுந்தால் என்ன
வீடிழந்து மக்களெல்லாம்
ஆவிகலங்ககிஅலைந்தாலும் நமக்கென்ன?
காவியமே பெரிது
கண்ணகியே கற்பரசி
சீதையவள்தானே திருச்செல்வி
மேடையிலே
வாதிடலே எமக்குரிய வரலாற்றுக் கடமை
ஆதலினால்
கட்டாயம் பட்டிமன்றம் காணல் புண்ணியமாம்
எட்டுமணிக்கே எழுந்தருள்வீர் ஜெகத்தீரே!

புதுவை இரத்தினதுரை

# கரும் புலிகள்



நிலமும் துயரும் நினைத்து எழுந்தோம்
நெருப்பை நாம் உண்போம்-தமிழன்
இருப்புக் குயிர் துறப்போம்-எங்கள்
புயலைக் கடக்க பூமி எங்கும்
புலிகள் நாம் என்போம்-கரும்
புலிகள் நாம் என்போம்

தாயின் நெற்றித் திலக முத்தம்
தந்து விடை பெற்றோம்-உயிர்
சிந்தும் படை பெற்றோம்-இந்தப்
பாயும் புலியின் உயிரின் உயிலில்
பாதை புதிதாகும்-விடியல்
கீதை பதிவாகும்!

நெல்லியடியில் மில்லர் பதித்த
நிரைகள் நாம் ஆனோம்-இரும்புத்
திரைகள் உருக் கானோம்-எங்கள்
சொல்லில் எழுதும் தேசச் சுவடு
கல்லில் எழுத் தானோம்-நாம்
வில்லில் கணை ஆவோம்!

இந்த யுகமும் எந்த யுகமும்
என்றும் சரிதம் நாம்-அணு
குண்டின் உடலம் நாம்-எம்
தந்தை தாயர் இருப்பும் நிலமும்
தாங்க வெடி யாவோம்-எமைக்
காணாப் பொடி யாவோம்!

எங்கள் பாதம் பதித்த சுவடு
என்றும் அழியாது-யுகம்
நின்றும் அகலாது-நாம்
வெங்களத்தில் உயிர்வெடியாய்
விதைத்த புலிகளடா-எம்
சிதையும் உயிர்களடா!!

-புதியபாரதி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழர் கலை பண்பாட்டுக்கழக யேர்மனி கிளை நடாத்தும்

## தியாகி திலீபன் நினைவுப் போட்டி 1995

உலகிலேயே நீர்கூட அருந்தாது உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த முதல் வீரன் தியாகி திலீபனை நினைவுகூர்ந்து தமிழர் கலைபண்பாட்டுக் கழக யேர்மனிக்கிளை கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

- 10 வயதிற்குட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவு எனவும், 11 வயதிலிருந்து 15 வயதுவரை நடுப்பிரிவு எனவும், 16 வயதிலிருந்து 19 வயதுவரை மேற்பிரிவு எனவும், 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிமேற்பிரிவு எனவும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து திறமை பரிசீலிக்கப்படும்.

  கீழ்ப்பிரிவு: 30.09.1984 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.
  நடுப்பிரிவு: 30.09.1979 இற்கும் 29.09.1984 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.
  மேற்பிரிவு: 30.09.1975 இற்கும் 29.09.1979 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.
  அதிமேற்பிரிவு: 29.09.1975 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.
- 'தியாகி திலீபன்' என்ற தலைப்பில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெறும்.
- கீழ்ப்பிரிவுக்கான கட்டுரை 80 சொற்களுக்கு மேற்படாமலும் பேச்சு 3 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.
- நடுப்பிரிவுக்கான கட்டுரை 140 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.
- மேற்பிரிவுக்கான கட்டுரை 200 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 7 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.
- அதிமேற்பிரிவுக்கான பேச்சு 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் அமைய வேண்டும்.
- அதிமேற்பிரிவினருக்கு கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்படமாட்டாது.
- கவிதைப் போட்டிகள் மேற்பிரிவினருக்கும் அதிமேற்பிரிவினருக்கும் மட்டுமே நடாத்தப்படும்.
- மேற்பிரிவினருக்கான கவிதை 16 வரிகளுக்கு மேற்படாமலும், அதிமேற்பிரிவினருக்கான கவிதை 32 வரிகளுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும். எழுதப்பட்ட கவிதை ஓசை நயத்துடன் படித்துக் காட்டும்படி கேட்கப்படுவர். கவிதையின் பிரதியொன்று போட்டி மண்டபத்தில் கையளித்தல் வேண்டும்.
- அனைத்துப் போட்டிகளிலிருந்து பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கேட்கப்படுவர்.
- விண்ணப்பஞ் செய்வதற்கான இறுதிநாள்: 30.08.1995

தொடர்பு முகவரி : Kulturelle Organaization der Tamilien e.V
Postfach 1160
37441 Bad Sachsa
05523 - 8608

தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

## தியாகி திலீபன் நினைவுப்போட்டி 1995

### விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : திரு /திருமதி /செல்வன் /செல்வி: ______________________
2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர் : ______________________
3. முகவரி : ______________________
4. தொலைபேசி இல :
5. விண்ணப்பதாரரின் பிறந்தநாள் : நாள் ......... மாதம் .......... ஆண்டு .............
6. பங்குபற்ற விரும்புந்துறை : கவிதை / கட்டுரை / பேச்சு
7. பங்குபற்றவிருக்கும் பிரிவு : கீழ்ப்பிரிவு / நடுப்பிரிவு / மேற்பிரிவு / அதிமேற்பிரிவு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், போட்டியில் பங்கேற்க விரும்புகின்றேனென்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதி கூறுகின்றேன்.

______________ பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்

______________ விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் : ______________

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அடுத்த

## ஒளிவீச்சு

ஜனவரி, பெப்ரவரி 1995

வெளிவந்துவிட்டது

- வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழு - தமிழீழத் தேசியத் தலைவர் சந்திப்பு
- தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் 2ம் ஆண்டு நினைவு
- மேஜர் சோதியா - 5ம் ஆண்டு நினைவு

என்று தணியும் குறும்படம்

விசேட இணைப்பு

**புதிய உதயம்**
தமிழீழத்தின் மீது சிறீலங்கா போர் விமானங்கள் செய்த அட்டூழியங்களும் அதற்கான பதிலடியும்

இன்னும் பல தமிழீழச் சம்பவங்களுடன் ...

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
யேர்மனிக் கிளை நடாத்தும்

## புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

### நிகழ்ச்சி நிரல்

- பரத நாட்டியம்
- நகைச்சுவை
- வில்லுப்பாட்டு
- விடுதலைக் கீதங்கள்
  - தமிழீழம் இசைக்குழு

வாடி நிற்கும் பயிருக்கு
வானம் பொழியும் மழை போல
வாழ்வுக்கேங்கும் எம் இனத்தோருக்கு
வாரி வழங்கி மகிழ்விப்போம்

காலம் : 21 - 10 - 1995 சனிக்கிழமை, 16.30 மணி
இடம் : Aula im Schulzentrum, St. Annen Str - 30
38723 Seesen.

மற்றும் பல சிறந்த கலைஞர்கள் யேர்மனியின் பல பாகங்களிலும் இருந்து வந்து இந்நிகழ்ச்சியை சிறப்பிக்கவுள்ளனர்.


## தாயகம் மீட்டிட நீ ஓடு !

எந்தையர் ஆண்டது இந்நாடாகும்
இதை எதிரிகள் ஆள்வது கேடாகும்
வந்து நீ களத்தினில் போராடு
அடிமை வாழ்விலும் சாவது மேலாகும்

மீனினம் பாடிடும் தேனாடு — வரை
விண்முட்டும் தீதிரு மலைநாடு
மானினம் வாழ்முல்லை வளக்காடு —
வயல்
வன்னியும் எங்களின் மண்ணாகும்

முத்துக்கள் விளைகடல் மன்னாரும் — தம்பி
முத்தமிழ் புலமைகள் யாழ்நாடும்
சொத்தென நிறைபுகழ் தமிழீழம் — இதில்
தொல்லைகள் மேவினால் என்னாகும்

சிங்களர் காலடி படலாமோ? — ஈழம்
சீர்கெட தமிழர்கள் விடலாமோ?
சொந்தமண் அழிந்ததன் பின்னாலே — பிறர்
சோற்றிற்கு வாழ்வதோ வாழ்வாகும்

கொலையொடு கொள்ளைகள் செய்வார்கள் —
பெரும்
குண்டினை மழையெனப் பெய்வார்கள்
தலையொடு மனைகளும் பாழாக — தீயில்
கருக்குவர் ஒவ்வொரு நாளாக

தாயகம் மீட்டிட நீ ஓடு. — பிரபா
தானையில் சேர்ந்தொரு புலியாகு
போய் இனிச்செருவினில் விளையாடு
தமிழ் பூத்திட புதியதோர் — புறம்பாடு.
புறம்பாடு ... புறம்பாடு.... புறம்பாடு !!!

( 'புதியதோர் புறம்' ஒலிப்பதிவு நாடாவிலிருந்து )

www.tamilarangam.net

# மெல்ல உற்றுக்கேள்

அந்திசாய அழகுகாட்டும் அடிவானம்
இப்போது இல்லை.
புகைவாங்கிப்போய் மேகங்கள்
உருக்குலைந்து கலைகின்றன.
இளவேனிற்காலம் தென்றல்மோத
புதிய பூக்கள் மலர்வதில்லை.
அமைதி உறையும் தெருக்களும்
அலைகளடங்காத கடலும்
இன்னும் இங்கே
இதயம் பிழிந்த சோகத்தோடு
அநாதையாய்...
உறவுகளின் வருகைக்காய்த்
தவிக்கின்றன.
நேற்றைய நாளில் பொழிந்த பால்நிலவு
இன்னும் மாறாது பூத்தது.
ஆனால் அனுபவிக்க மனிதர்கள்
இல்லை.
தலைக்கறுப்பே காணாத
மரணப்படுக்கை.
அதில் ஆவேசங் கொண்டனவாய்
இடைவரும் பச்சைப்பேய்கள்.
கோரத்தாண்டவத்தில் ஊழிநடனத்தில்
உருமாறிப்போன என்தேசம்
உன்னிடம் எதையோ யாசிக்கின்றது.
மெல்ல உற்றுக்கேள் அதன்
உயிர்ச்சுருளின் உணர்வுகளை.

- சுதாமதி



பற்றியெரிகிறது பகைவனின் "புக்காரா"



போர்முனையில் புலிகள்



இராணுவ வெடிமருந்து வண்டிமீது "புலிப்பாய்ச்சல்"


U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 354 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943


Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்